75 YEARS
STABILITY FOR PROSPERITY
1950-2025

# நாணயக் கொள்கை அறிக்கை

2025 பெப்புருவரி



ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

நாணயக் கொள்கை அறிக்கையானது ஆண்டிற்கு இரு முறை வெளியிடப்படும். 2025 சனவரி 29 அன்று மேற்கொள்ளப்பட்ட நாணயக் கொள்கை அறிவிப்புடன் முடிவுறுத்தப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் 2025 சனவரியில் உள்ளவாறான நாணயக் கொள்கைச் சுற்றில் கிடைப்பனவாகவுள்ள முக்கியமான தரவுகளை அடிப்படையாகக்கொண்டு இவ்வறிக்கையின் உள்ளடக்கம் அமைந்துள்ளது.

© இலங்கை மத்திய வங்கி

ISBN 978-624-5917-95-2

2025 பெப்புருவரி 14

## உள்ளடக்க அட்டவணை


**இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கைக் கட்டமைப்பு .................................... 4**

**சுருக்க அறிக்கை ................................................................................ 6**

**1. நாணயக் கொள்கைச் சுருக்கம் ...................................................................... 8**

**2. பணவீக்கம் மற்றும் பொருளாதாரத் தோற்றப்பாடு........................................... 10**

**2.1. அடிப்படை எதிர்வுகூறல் ..................................................................... 10**

பணவீக்கத்திற்கான வாய்ப்புக்கள் ........................................................................ 11

*சிறப்புக்குறிப்பு அ: பணவீக்க வீச்சு வரைபடத்தை எப்படி விளங்கிக்கொள்வது......................... 14*

உண்மை பொருளாதார வளர்ச்சிக்கான வாய்ப்புக்கள் ................................................ 16

**2.2. எதிர்வுகூறலுக்கு அடிப்படையாகவிருக்கும் முக்கிய எடுகோள்கள் ........................ 17**

உலகளாவிய சூழல்............................................................................................ 17

இறைப் பாதை.................................................................................................. 18

வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு ......................................................................... 18

**2.3. எதிர்வுகூறல்களுக்கான இடர்நேர்வுகள்.................................................... 19**

பணவீக்க எதிர்வுகூறல்களுக்கான இடர்நேர்வுகள்....................................................... 19

பொருளாதார வளர்ச்சி எதிர்வுகூறல்களுக்கான இடர்நேர்வுகள்........................................... 20

**2.4. முன்னைய எதிர்வுகூறல்களுடனான ஒப்பீடு .................................................... 21**

நடுத்தரகால எறிவுகளுக்குப் பயன்படுத்தப்படும் எடுகோள்கள் ........................................... 21

பணவீக்கப் பாதை.............................................................................................. 23

**3. தற்போதைய பொருளாதார அபிவிருத்திகள் ................................................... 25**

**3.1. பணவீக்கம்................................................................................... 25**

*சிறப்புக்குறிப்பு ஆ: இலங்கையின் பணச்சுருக்கத்தினை ஏற்படுத்திய விலைப் போக்குகள் மற்றும் பொதுமக்களின் கருத்துக்கள்........................................................................ 29*

**3.2. உண்மைத் துறை............................................................................... 33**

**3.3. நாணயத் துறை ............................................................................... 36**

வட்டி வீதங்கள்................................................................................................. 36

உள்நாட்டுப் பணச் சந்தைத் திரவத்தன்மை.................................................................. 37

உள்நாட்டுக் கொடுகடன் நிலைமைகள் மற்றும் நாணய நிரம்பல்........................................... 39

**3.4. வெளிநாட்டுத் துறை........................................................................... 40**

சென்மதி நிலுவை ............................................................................................... 41

செலாவணி வீதம்................................................................................................ 43

ஒதுக்குச் சொத்துக்கள்.......................................................................................... 44

**3.5. இறைத் துறை ................................................................................. 45**

**3.6. நிதியியல் துறை ............................................................................. 47**

**3.7. உலகளாவிய அபிவிருத்திகள்.................................................................. 49**

# இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கைக் கட்டமைப்பு

2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ், உள்நாட்டு விலை உறுதிப்பாட்டினை அடைதலும் பேணுதலும் இலங்கை மத்திய வங்கியின் முதன்மைக் குறிக்கோளாகக் காணப்படுகின்றது. பணவீக்கத்தினைத் தாழ்ந்த மற்றும் நிலையான மட்டங்களில் பேணுவதன் மூலம் மத்திய வங்கியானது நீடித்துநிலைத்திருக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் பொதுமக்களின் பொருளாதார மற்றும் நிதியியல் நலனோம்புகைக்கும் பங்களிப்புச்செய்கின்றது.

மத்திய வங்கியானது அதன் முதன்மைக் குறிக்கோளான உள்நாட்டு விலை உறுதிப்பாட்டினைப் பேணுதலினை அடையும் பொருட்டு நாணயக் கொள்கையினை மேற்கொள்கின்றது. இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் பிரகாரம், நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்புடன் இசைந்து செல்லும் விதத்தில் நாணயக் கொள்கையினை உருவாக்குவதற்கும் நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த செலாவணி வீத முறைமையொன்றினை நடைமுறைப்படுத்துவதற்கும் நாணயக் கொள்கைச் சபை பொறுப்பாகவுள்ளது. நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பானது நிதியமைச்சு மற்றும் மத்திய வங்கி என்பவற்றிற்கிடையிலான நாணயக் கொள்கைக் கட்டமைப்புசார் உடன்படிக்கையினால் நிர்ணயிக்கப்பட்டவாறு பணவீக்கத்தினை இலக்கிடப்பட்ட மட்டத்தில் பேணுவதனை இலக்காகக் கொண்டுள்ளது. 2023 ஒத்தோபர் 5ஆம் திகதியன்று அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தற்போதைய நாணயக் கொள்கைக் கட்டமைப்புசார் உடன்படிக்கையானது காலாண்டு முதன்மைப் பணவீக்கத்தினை 5 சதவீதத்தில் பேணுவதற்கு மத்திய வங்கிக்கு ஆணையளிக்கின்றது.[1]

பணவீக்க இலக்கினை அடையும் பொருட்டு, குறுங்காலச் சந்தை வட்டி வீதங்களை விரும்பத்தக்க பாதையில் வழிநடத்துவதற்கு மத்திய வங்கி அதன் கொள்கைச் சாதனங்களைப் பயன்படுத்துகின்றது. நாணயக் கொள்கையின் ஊடுகடத்தலினை மேம்படுத்துவதனையும் நாணயக் கொள்கைத் தொடர்பூட்டலினை எளிமையாக்குவதனையும் நோக்காகக் கொண்டு 2024 நவெம்பர் 27 தொடக்கம் நடைமுறைக்கு வரும் விதத்தில் மத்திய வங்கி அதன் இரட்டைக் கொள்கை வீதப் பொறிமுறையிலிருந்து ஒற்றைக் கொள்கை வீதப் பொறிமுறையொன்றிற்கு நகர்ந்தது. இதற்கமைய, மத்திய வங்கியின் நாணயக் கொள்கை நிலைப்பாட்டினைச் சமிக்ஞைசெய்வதற்கும் தொழிற்படுத்துவதற்கும் அதன் முதன்மையான நாணயக் கொள்கைக் கருவியாக ஓரிரவுக் கொள்கை வீதம் அறிமுகப்படுத்தப்பட்டது.[2] இம்மாற்றத்துடன் வங்கிகளிற்கிடையிலான சந்தையில் வங்கிகள் ஒவ்வொன்றும் தமக்கிடையில் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்கின்ற வீதமான சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதத்தினை அறிவிக்கப்பட்ட ஓரிரவுக் கொள்கை வீதத்தில்

---

[1] பணவீக்க இலக்கானது 2352/20ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் மக்களிற்குத் தொடர்பூட்டப்பட்டது. காலாண்டு முதன்மைப் பணவீக்கமானது தொடர்புடைய காலாண்டின் மூன்று மாதகாலப்பகுதியில் மாதாந்த கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணில் ஏற்பட்ட ஆண்டிற்கு ஆண்டு சதவீத மாற்றத்தின் எளிய சராசரியினைக் குறிக்கின்றது.

[2] துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் என்பன மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதங்களாக இதன்பின்னர் கருத்திற்கொள்ளப்படமாட்டாது. மேலும், இவை பங்கேற்கும் நிறுவனங்கள் மத்திய வங்கியுடனான ஓரிரவுக் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதற்கான துணைநில் வசதிகளிற்குப் பிரயோகிக்கப்படுகின்ற வீதங்களாகத் தொடர்ந்து தொழிற்படும். துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் என்பன முன்கூட்டி நிர்ணயிக்கப்பட்ட எல்லையொன்றுடன் ஓரிரவுக் கொள்கை வீதத்துடன் இணைக்கப்படுகின்றன. மேலதிக தகவல்களிற்கு மத்திய வங்கியின் இணையத்தளத்தில் கிடைப்பனவாகவுள்ள ஓரிரவு கொள்கை வீதத்தின் அறிமுகம் குறித்த தகவல் தொடர் குறிப்பினைப் பார்வையிடவும்.

அல்லது அதனை அண்மித்த மட்டங்களில் பேணும் விதத்தில் மத்திய வங்கி இலக்கிடும். சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதமானது நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின் கீழ் மத்திய வங்கியின் தொழிற்பாட்டு இலக்காகத் தொடர்ந்தும் காணப்படுகின்றது. நாணயக் கொள்கை நிலைப்பாட்டுடன் இசைந்து செல்லும் விதத்தில் பேணப்படும் ஓரிரவுச் சந்தை வட்டி வீதங்கள் நிதியியல் சந்தைகளினூடாகப் பொருளாதாரத்திற்கு ஊடுகடத்தப்படுவதுடன், இவை இறுதியில் பணவீக்கத்தைப் பாதிப்படையச் செய்கின்றன.

நாணயக் கொள்கைத் தீர்மானங்கள் தரவினால் உந்தப்பட்டவையாகக் காணப்படுகின்றன. நாணயக் கொள்கை நடவடிக்கைகள் பணவீக்கத்தில் அவற்றின் முழுமையான தாக்கத்தினை ஏற்படுத்துவதற்குக் காலமெடுக்குமென்பதனால் நாணயக் கொள்கைத் தீர்மானங்கள் முன்னோக்கிய பார்வையுடையனவாகக் காணப்பட வேண்டும். பொருத்தமான நாணயக் கொள்கை நிலைப்பாடு குறித்துத் தீர்மானிப்பதற்கு ஆண்டிற்கு ஆறு தடவைகள் மத்திய வங்கியின் நாணயக் கொள்கைச் சபை கூடுகின்றது. நாணயக் கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்கின்றபோது, நாணயக் கொள்கைச் சபையானது பணவீக்கம் மற்றும் பணவீக்கத் தோற்றப்பாடு, கிடைக்கக்கூடிய தரவுகளின் அடிப்படையிலமைந்த பொருளாதாரத்தின் நிலை மற்றும் பொருளாதாரத் தோற்றப்பாடு, எதிர்வுகூறல்கள், மற்றும் இடர்நேர்வுகள் மற்றும் இத்தகைய எதிர்வுகூறல்களைச் சுற்றியுள்ள நிச்சமற்றத்தன்மைகள் போன்றவற்றை மதிப்பீடு செய்கின்றது. ஆளுநரின் தலைமையிலான உள்ளகத் தொழில்நுட்பக் குழுவான நாணயக் கொள்கைக் குழுவானது உன்னிப்பான பரிசீலனைகளுக்குப் பின்னர் நாணயக் கொள்கைச் சபையின் கவனத்திற்குத் தொழில்நுட்ப ரீதியிலான பரிந்துரைகளை வழங்குகின்றது.

நாணயக் கொள்கை அறிக்கையானது மத்திய வங்கிச் சட்டத்தின் 27 மற்றும் 80ஆம் பிரிவுகளை நிறைவேற்றும் வகையில் தயாரிக்கப்பட்டு, நாணயக் கொள்கையின் நடைமுறைப்படுத்தல் மற்றும் அதன் குறிக்கோள்களை அடைதல் என்பவற்றுடன் பணவீக்கத்தின் அண்மைய அசைவுகள், பணவீக்கத்தின் மூலங்கள், பணவீக்கத்திற்கான நடுத்தரகால எறிவுகள், அத்தகைய எறிவுகளிற்கான முக்கிய இடர்நேர்வுகள் என்பவற்றை தெளிவுபடுத்துகின்ற அறிக்கையொன்றினை ஆண்டிற்கு இருமுறை வெளியிடுவதற்கு மத்திய வங்கியினைத் தேவைப்படுத்தப்படுகின்றது. மேலும், அறிக்கையானது பொருளாதாரத்தின் ஏனைய பல்வேறு துறைகளின் தற்போதைய அபிவிருத்திகளைப் பொதுமக்களுக்குத் தொடர்பூட்டுகின்ற வேளையில், அதனுடனிணைந்த இடர்நேர்வுகளுடன்கூடிய பொருளாதார வளர்ச்சித் தோற்றப்பாட்டின் மதிப்பீடொன்றினையும் வழங்குகின்றது.

## சுருக்க அறிக்கை

மீட்டெடுக்கப்பட்ட பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டிற்கு மத்தியில் உள்நாட்டு பொருளாதார நடவடிக்கைகள் வலுப்பெற்று 2024இல் இலங்கைப் பொருளாதாரம் குறிப்பிடத்தக்க மீண்டெழுந்தன்மையை தொடர்ந்தும் எடுத்துக்காட்டியது. உயர் பணவீக்க நிகழ்வைத் தொடர்ந்து குறைவாகக் காணப்பட்ட பணவீக்கமானது 2024இல் மேலும் தளர்ந்து, ஆண்டின் பிற்பகுதியில் எதிர்மறையாக மாறியது. விலை அழுத்தங்களின் இக்குறைவானது நெருக்கடிக்குப் பின்னரான காலப்பகுதியில் வியாபாரங்கள் மற்றும் குடியிருப்புக்கள் எதிர்கொள்ளும் சில சுமைகளைத் தணித்துள்ளதுடன் இழந்த கொள்வனவு இயலுமையைப் படிப்படியாக ஓரளவு மீட்டெடுத்தது. மத்திய வங்கி 2024இல் அதன் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாட்டைத் தொடர்ந்ததுடன் இதன் மூலம் மிதமான பணவீக்க அழுத்தங்களைக் கொண்ட சூழலில் உள்நாட்டு பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்தது.

மின்சார தீர்வைகள், எரிபொருள் மற்றும் எரிவாயு விலைகள் மற்றும் போக்குவரத்துச் செலவுகள் ஆகியவற்றில் தொடர்ச்சியான கீழ்நோக்கிய திருத்தங்களுடன் வீழ்ச்சியடைந்துவரும் உணவு விலைகள் என்பன பணவீக்கத்தின் மெதுவடைதலுக்கு பங்களித்ததுடன் இது ஆண்டின் இறுதியில் எதிர்மறையாக மாறியது. பணவீக்க எதிர்பார்க்கைகள் மிதமடைந்துக் காணப்பட்டன.

உள்ளார்ந்த கேள்வி நிலைமைகளை வலுப்படுத்துவதன் மூலம் உந்தப்பட்டும், அத்துடன் ஆண்டிற்காண்டு பணவீக்கத்தைக் குறைக்கும் புள்ளிவிபரத் தளத்தின் தாக்கம் குறைவடைந்து வருவதாலும் முதன்மைப் பணவீக்கமானது நேர்மறை மட்டங்களுக்கு உயருவதற்கு முன்னர் 2025இன் முன்னைய காலப்பகுதியில் எதிர்மறையாகக் காணப்படுமென எறிவுசெய்யப்படுகின்றது. முதன்மை பணவீக்கம் 2025ஆம் ஆண்டின் பிற்பகுதிக்கும் 2026ஆம் ஆண்டின் நடுப்பகுதிக்கும் இடையிலான காலப்பகுதியில் இலக்கை விட சற்று அதிகமாகக் காணப்பட்டாலும் இந்த விலகல் குறுகிய காலத்திற்கானதாக அமையுமென எறிவுகள் குறிப்பிடுகின்றன. இதற்கிடையில், மையப் பணவீக்கம் 2025ஆம் ஆண்டின் தொடக்கத்தில் தற்காலிக வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்தாலும் அதன் பின்னர் நிலைபெறும்.

ஓரிரவு கொள்கை வீதமான ஒற்றை கொள்கை வட்டி வீத பொறிமுறையின் நடைமுறைப்படுத்தலுடன் 2024 நவம்பரில் அறிமுகப்படுத்தப்பட்ட மேலுமொரு தளர்த்தலுடன் இலங்கை மத்திய வங்கி தனது தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாட்டை ஆண்டு முழுவதிலும் பேணியது. இருப்பினும், கேள்வி மாற்றங்களைக் காட்டிலும் சாதகமான நிரம்பல் பக்க நிலைமைகளினால் இந்த பணவீக்கத்தின் மிதமான தன்மை உந்தப்பட்டதால், நாணயக் கொள்கை தளர்த்தலானது எச்சரிக்கையுடன் மேற்கொள்ளப்பட்டது. இவ்வபிவிருத்திகளைப் பிரதிபலிக்கும் வகையில், சந்தை வட்டி வீதங்கள் மேலும் குறைந்து, தனியார் துறைக்கு பரந்த அடிப்படையிலான கொடுகடன் விரிவாக்கத்தை வசதிப்படுத்தியது.

தளர்த்தப்பட்ட நாணய நிலைமைகள், தனியார் துறைக்கு அதிகரித்த கொடுகடன் பாய்ச்சல்கள், மேம்பட்ட வியாபார மற்றும் நுகர்வோர் நம்பிக்கை மற்றும் வலுவான வெளிநாட்டுக் கேள்வி என்பவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு ஏறத்தாழ 5 சதவீதமாக மதிப்பிடப்பட்ட ஆண்டிற்கான வளர்ச்சியுடன் பொருளாதாரம் 2024இல் வலுவான மீட்சியை அனுபவித்தது. இது 2017ற்குப் பின்னர் பதிவுசெய்யப்பட்ட மிக உயர்ந்த வளர்ச்சியாகும். தேவையான கட்டமைப்புச் சீர்திருத்தங்கள் மற்றும்

வளர்ச்சியை நோக்காகக் கொண்ட கொள்கைகளின் செயற்றிறனான நடைமுறைப்படுத்தலுடன் இந்த உத்வேகம் நீடித்திருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

பணவீக்கம் மற்றும் வளர்ச்சி எறிவுகள் தொடர்பான இடர்நேர்வுகளின் அவதானமான மதிப்பீடொன்றானது அண்மைய மற்றும் நடுத்தர காலங்கள் இரண்டிலும் பரந்த சமநிலையான தோற்றப்பாடொன்றினைக் குறிக்கின்றது.

## 1. நாணயக் கொள்கைச் சுருக்கம்

2023 யூன் முதல் முன்னெடுக்கப்பட்ட தளர்வான நாணயக் கொள்கை நிலைப்பாட்டைத் தொடர்ந்து, இலங்கை மத்திய வங்கி 2024இல் தனது நாணயக் கொள்கை நிலைப்பாட்டை மேலும் தளர்த்தி, 2025 ஆம் ஆண்டின் முற்பகுதியிலும் இந்த நிலைப்பாட்டைப் பேணியது.

2023 ஆம் ஆண்டின் இரண்டாம் அரையாண்டுப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட 650 அடிப்படை புள்ளிகள் குறைப்பைத் தொடர்ந்து, மத்திய வங்கி 2024 ஆம் ஆண்டில் மூன்று நாணயக் கொள்கை மீளாய்வுச் சுற்றுகளில் முக்கிய கொள்கை வீதங்களை மொத்தமாக 125 அடிப்படை புள்ளிகளினால் குறைத்தது. மார்ச் 2024 இல், கொள்கை வட்டி வீதங்கள் 50 அடிப்படை புள்ளிகளால் குறைக்கப்பட்டு கொள்கை வட்டி வீதங்களின் கீழ்நோக்கிய சீராக்கத்திற்கு ஏற்ப சந்தை வட்டி வீதங்களை சீராக்குவதற்கு சிறிய காலத்தை அனுமதித்ததன் பின்னர் யூலை 2024 இல் மேலும் 25 அடிப்படை குறைப்பு மேற்கொள்ளப்பட்டது. இந்த கொள்கை சீராக்கங்கள் பெருமளவில் மந்தமான பணவீக்க அழுத்தங்கள், தாழ்ந்த பணவீக்க எதிர்பார்க்கைகள் மற்றும் வெளிநாட்டுத் துறையில் புதுப்பிக்கப்பட்ட மீண்டெழுந்தன்மை ஆகியவற்றால் ஆதரவளிக்கப்பட்டன. மேலும், தேர்ந்தெடுக்கப்பட்ட சந்தை கடன் வட்டி வீதங்களின் கீழ்நோக்கிய மாற்றங்களில் காணப்பட்ட இறுக்கத்தன்மை நாணயக் கொள்கை நடவடிக்கைகளின் செயற்றிறனான கசிவுத்தன்மையை மேம்படுத்துவதற்கும் மேலதிகமான கொள்கைத் தூண்டலை தேவைப்படுத்தியது.

இதற்கிடையில், குறிப்பாக சந்தை கடன் வட்டி வீதங்களில் தொடர்ச்சியான வீழ்ச்சி, தனியார் துறைக்கான கடன் விரிவாக்கம் மற்றும் தாழ்ந்த பணவீக்க சூழலுக்கு மத்தியில் உள்நாட்டு பொருளாதார நடவடிக்கைகளுக்கு புத்துயிர் அளித்தல் ஆகியவற்றின் அடிப்படையில் கொள்கை தளர்த்தல் எதிர்பார்த்த விளைவுகளை ஏற்படுத்தியவேளையில் மத்திய வங்கி ஆகஸ்ட் 2024 முதல் கொள்கை விகித மாற்றங்களில் ஒரு தற்காலிக இடைநிறுத்தத்தைத் தேர்ந்தெடுத்தது. அண்மைக் காலத்தில் ஏதிர்பார்த்ததை விட அதிகமான பணச்சுருக்க நிலைமைகளுக்கு முன்னராக 2024 நவம்பரில் இன்னுமொரு குறைப்பினை நடைமுறைப்படுத்தியது. மத்திய வங்கி தனது இரட்டை கொள்கை வட்டி வீத பொறிமுறையிலிருந்து ஒற்றை கொள்கை வட்டி வீத பொறிமுறைக்கு மாறியதன் மூலம் 2024 ஆம் ஆண்டில் நாணயக் கொள்கை உருவாக்கம் மற்றும் நடைமுறைப்படுத்தலில் ஒரு முக்கிய மைல்கல் எட்டப்பட்டது. அதற்கேற்ப, 2024 நவம்பரில் மத்திய வங்கியின் முதன்மை நாணயக் கொள்கை கருவியாக ஓரிரவு கொள்கை வீதம் அறிமுகப்படுத்தப்பட்டது. அறிமுகப்படுத்தப்பட்டபோது, ஓரிரவு கொள்கை வீதம் 8.00 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டது, இது கொள்கை வீதத்தில் நடைமுறை ரீதியில் ஏறத்தாழ 50 அடிப்படை புள்ளி குறைப்பினை பிரதிபலிக்கிறது.

பெருமளவில் நிரம்பல் பக்க காரணிகளினால் அண்மைக்காலத்தில் பணச்சுருக்கத்தின் சாத்தியமான அதிகரிப்பின்போதிலும் 2025இன் இரண்டாமரையாண்டில் பணவீக்க இலக்கை நோக்கி பணவீக்கத்தின் எறிவுசெய்யப்படும் ஒன்றிணைப்பை கருத்திற்கொண்டு 2025 சனவரியில் கொள்கை வட்டி வீதம் மாற்றமின்றி பேணப்பட்டது.

இந்த ஆண்டின் இரண்டாவது நாணயக் கொள்கை மீளாய்விற்கு நாணயக் கொள்கைச் சபை 2025 மார்ச்சில் கூடும்.

**கடந்த நாணயக் கொள்கை அறிக்கையிலிருந்து நாணயக் கொள்கைத் தீர்மானங்கள் (2024 ஓகத்து – 2025 சனவரி):**

| செத்தெம்பர் 2024 | நவம்பர் 2024 | சனவரி 2025 |
|---|---|---|
| கொள்கை வட்டி வீதங்கள் 8.25 சதவீதம் (துணைநில் வைப்பு வசதி வீதம்) மற்றும் 9.25 சதவீதமாக (துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம்) பேணப்பட்டது | ஓரிரவு கொள்கை வீதமானது முதன்மையான நாணயக் கொள்கைக் கருவியாக அறிமுகப்படுத்தப்பட்டதுடன் ஏறத்தாழ 50 அடிப்படைப் புள்ளிகளைக் கொண்ட நடைமுறைக் குறைப்புடன் 8.00 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டது | ஓரிரவு கொள்கை வீதம் 8.00 சதவீதமாகப் பேணப்பட்டது |

**நாணயக் கொள்கை மீளாய்வு தொடர்பான ஊடக அறிக்கைகளுக்காக இதிலுள்ள கியூஆர் குறியீட்டை ஸ்கேன்/கிளிக் செய்யவும்**

# 2. பணவீக்கம் மற்றும் பொருளாதாரத் தோற்றப்பாடு

பணவீக்கம் மற்றும் உண்மைப் பொருளாதார வளர்ச்சி என்பவற்றின் எறிவுகளை மையமாகக் கொண்டு, 2025 சனவரி மாத நாணயக் கொள்கைத் தீர்மானத்திற்கு ஆதரவளிக்கின்ற விதத்தில், மத்திய வங்கியின் அலுவலர்களினால் மேற்கொள்ளப்பட்ட நடுத்தர கால பேரண்டப்பொருளாதார எறிவுகள் இப்பகுதியில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.[3] இவ்வெறிவுகள், 2025 சனவரி மாத நாணயக் கொள்கைச் சுற்றில் கிடைப்பனவாகவிருந்த தரவுகள், முக்கிய மாறிகளின் அண்மைக்கால எதிர்வுகூறல்கள், உலகளாவிய பேரண்டப்பொருளாதார எறிவுகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட ஊகங்கள் மற்றும் தீர்மானங்கள் என்பவற்றைப் பிரதிபலிக்கின்றன. இவ்வெறிவுகள் இவ்வறிக்கையில் அடிப்படை எதிர்வுகூறலாகக் கருத்திற்கொள்ளப்படுகின்றன.

## 2.1. அடிப்படை எதிர்வுகூறல்

சமீபத்திய அண்மைய கால எறிவுகளின் பிரகாரம், பணவீக்கத்தினை குறைவடையச் செய்யப் பங்களிக்கின்ற மின்சாரத் தீர்வைகளுக்கான கீழ்நோக்கிய திருத்தத்தினையும் புள்ளிவிபர தளத்தாக்கத்தினையும் பிரதிபலிக்கும் வகையில், ஆண்டிற்கு ஆண்டு முதன்மைப் பணவீக்கமானது 2025 இன் முதலாம் காலாண்டில் மேலும் குறைவடையுமென எறிவுசெய்யப்பட்டுள்ளது. எனினும், இது 2025 இன் இரண்டாம் காலாண்டில் அதிகரிக்குமென எறிவுசெய்யப்பட்டுள்ளது. நடுத்தர கால எறிவுகளின்படி, முதன்மைப் பணவீக்கம் 2025 இன் மூன்றாம் காலாண்டில் கணிசமானளவில் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுவதுடன், இது 2026 இன் நடுப்பகுதியில் அதன் உயர் எல்லையை சுற்றி நகர்வதற்கான சாத்தியக்கூறு காணப்படுகின்றது. எவ்வாறாயினும், முதன்மைப் பணவீக்கமானது பொருத்தமான கொள்கை வழிமுறைகளின் நடைமுறைப்படுத்தலால் ஆதரவளிக்கப்பட்டு, நடுத்தர காலத்தில் இலக்கிடப்பட்ட 5 சதவீத மட்டத்தினை அடையுமென எறிவுசெய்யப்பட்டுள்ளது. 2024 இன் முதல் மூன்று காலாண்டுகளில் உத்வேகத்தை நிலைநிறுத்தி, 2024 இன் நான்காம் காலாண்டிற்கான உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி வலுவானதாக இருக்குமென சமீபத்திய சமகால எதிர்வுகூறல்கள் குறித்துக்காட்டுகின்றன. முன்னோக்கிப் பார்க்கையில், பொருளாதார வளர்ச்சியானது, நடுத்தர காலத்தில் மிதமான வேகத்தில் இருந்தாலும் அதன் மீளெழுச்சியை தொடருமென எதிர்பார்க்கப்படுகின்றது. தளர்த்தப்பட்ட நாணய நிலைமைகள் வளர்ச்சியைத் தூண்டுமென எதிர்பார்க்கப்படுகின்ற போதிலும், நடுத்தர காலத்தில் இறைத் திரட்சி முயற்சிகளின் எதிர்பார்க்கப்படுகின்ற தொடர்ச்சி ஒரு சுருக்க விளைவை தொடர்ந்தும் ஏற்படுத்துகின்றன. மேலும், நடுத்தர காலத்தின் வளர்ச்சித் தோற்றப்பாடானது உலகளாவிய புவிசார் அரசியல் சூழலினால் உந்தப்பட்டு கணிசமான நிச்சயமற்றதன்மைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

[3] உலகளாவிய பேரண்டப்பொருளாதார எதிர்வுகூறல்கள் மற்றும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணவீக்கத் தரவுகளின் மாதாந்த வெளியீடுகள் மற்றும் மொ.உ.உற்பத்தித் தரவுகளின் காலாண்டு வெளியீடுகள் என்பன உள்ளடங்கலாக, எனினும் இவை மாத்திரமன்றி, அண்மைய பொருளாதார அபிவிருத்திகள் தொடர்பான தரவுகள் என்பவற்றைப் பயன்படுத்தி ஒவ்வொரு நாணயக் கொள்கைச் சுற்றிலும் இற்றைப்படுத்தப்படுகின்ற நடுத்தர கால பேரண்டப்பொருளாதார எறிவுகளை அடையும் பொருட்டு பகுதியளவிலான கட்டமைப்புசார் பேரண்டப்பொருளாதார மாதிரியொன்றான காலாண்டு எறிவு மாதிரியை மத்திய வங்கி பயன்படுத்துகின்றது.


**பணவீக்கத்திற்கான வாய்ப்புக்கள்**

சமீபத்திய அண்மைய கால எறிவுகளின் பிரகாரம், ஒப்பீட்டளவில் மெதுவடைந்த தளம்பலடைகின்ற உணவுப் பணவீக்கத்தின் எதிர்பார்க்கைகளுடன் இணைந்து, 2025 சனவரி 18 அன்று நடைமுறைக்கு வந்த மின்சாரத் தீர்வைகளிற்கான கணிசமானளவிலான கீழ்நோக்கிய திருத்தத்தினால் உந்தப்பட்டு, 2025இன் முதலாம் காலாண்டில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அடிப்படையிலமைந்த பணச்சுருக்கமானது (ஆண்டிற்கு ஆண்டு) சராசரியளவில் எதிர்பார்த்ததிலும் பார்க்க தாழ்வடையுமென எதிர்வுகூறப்பட்டுள்ளது. மேலும், பெறுமதி கூட்டப்பட்ட வரிச் சீராக்கங்களின் காரணமாக 2024இன் முற்பகுதியில் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் பாதகமான வானிலை நிலைமைகளின் காரணமாக நிரம்பல் பக்க இடையூறுகளிற்கு மத்தியில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க உணவுப் பணவீக்கம் என்பன காரணமாக புள்ளிவிபரத் தளத் தாக்கமும் 2025இன் முதலாம் காலாண்டுப் பகுதியில் தாழ்வடைந்து செல்கின்ற ஆண்டிற்கு ஆண்டு பணவீக்கத்திற்குப் பங்களிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. அண்மைய எறிவுகளின் பிரகாரம், முதன்மைப் பணவீக்கமானது அதிகரித்து 2025இன் இரண்டாம் காலாண்டில் ஏறத்தாழ பூச்சியமாகச் சராசரியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. 2025இன் மூன்றாம் காலாண்டுப் பகுதியில், பணவீக்கமானது மேலும் அதிகரித்து, 5 சதவீத பணவீக்க இலக்கினை எட்டுமென எதிர்வுகூறப்படுகின்றது. 2025இன் இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டுகளில் எதிர்பார்க்கப்படும் முதன்மைப் பணவீக்கத்தின் துரித உயர்வடைதலிற்கு கணிசமானளவிலான சாதகமற்ற தளத் தாக்கம், உலக உணவுப் பணவீக்கத்தில் வேகமான அதிகரிப்பு மற்றும் கேள்வி அழுத்தங்களின் படிப்படியான அபிவிருத்தி என்பன முதன்மைக் காரணங்களாகக் காணப்படுகின்றன. முதன்மைப் பணவீக்கமானது 2025இன் நான்காம் காலாண்டு மற்றும் 2026இன் முதலாம் காலாண்டில் துரிதமடையுமெனவும் 2026இன் இரண்டாம் காலாண்டில் பணவீக்க இலக்கிலிருந்து மேலாக ஏறத்தாழ 2 சதவீத புள்ளிகளுடன் உச்சமடையுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இருப்பினும், மதிப்பிடப்பட்ட உயர்வடைதலின் பாரியளவிலான உந்துசக்தியொன்றான தளத் தாக்கத்தின் விளைவு தொடர்ந்துவருகின்ற காலாண்டுகளில் குறைவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றமையினால் பணவீக்கத்தின் உயர்வடைதல் தொடர்ந்து காணப்படுமென எதிர்பார்க்கப்படுவதில்லை. இதற்கமைய, முதன்மைப் பணவீக்கமானது பொருத்தமான கொள்கை வழிமுறைகளினால் ஆதரவளிக்கப்பட்டு 2026இன் மூன்றாம் காலாண்டிலிருந்து படிப்படியாக வீழ்ச்சியடையுமெனவும் நடுத்தர காலத்தில் 5 சதவீத இலக்கிடப்பட்ட மட்டத்தினை அண்மித்து உறுதிநிலைப்படுத்தப்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

பணவீக்கத்தின் கூறுகளைக் கருத்திற்கொள்ளும் போது, அடிப்படைக் கேள்வி அழுத்தங்களைப் பெற்றுக்கொள்வதற்குத் தளம்பலடையும் விலைகள் கொண்ட பொருட்கள் மற்றும் பணிகளை விலக்குகின்ற மையப் பணவீக்கமானது நடுத்தர காலத்தில் பரந்தளவில் நிலையாகத் தொடர்ந்தும் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. 2024 சனவரியில் நடைமுறைப்படுத்தப்பட்ட பெறுமதி கூட்டப்பட்ட வரிச் சீராக்கங்களின் காரணமாக மையப் பணவீக்கக் கூடையின் அநேகமான பொருட்களின் செலவினங்கள் அதிகரித்தமையினால் முதன்மைப் பணவீக்கத்தினைப் போலவே, மையப் பணவீக்கமும் 2025இன் முதலாம் காலாண்டில் தளத் தாக்கத்தினால் பாதிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கமைய, மையப் பணவீக்கம் 2025இன் முதலாம் காலாண்டில் தற்காலிக சரிவொன்றினைக் கொண்டிருக்குமென எதிர்பார்க்கப்படுகின்ற போதிலும், அதன்பின்னர் தாழ்ந்தளவிலான தளம்பலொன்றுடன் முதன்மைப் பணவீக்கத்திற்கான இலக்குடன் சீராக இயல்புநிலையினை அடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. முதன்மைப் பணவீக்கத்தினைக் கீழ்நோக்கி உந்தச்செய்யும் சாதனமாகக் காணப்படுகின்ற வலு மற்றும் போக்குவரத்துடன் தொடர்புடைய வகைப்பாட்டில் உள்ளடங்கும் வகைகளை மையப் பணவீக்கச் சுட்டெண்ணானது பாரியளவில் விலக்குவதனால் முதன்மைப் பணவீக்கத்தின் அண்மைய குறைவானது மையப் பணவீக்கத்தில் அதேயளவொன்றில்

பிரதிபலிக்கப்படவில்லை. அதேவேளை, மையப் பணவீக்கமும் உலகளாவிய உணவு விலைகள் மற்றும் செலாவணி வீதத்தின் அசைவுகள் என்பவற்றினால் பகுதியளவில் தாக்கத்திற்குட்பட்டுக் காணப்படுகின்றது.

**வரைபடம் 01: எறிவுசெய்யப்பட்ட முதன்மைப் பணவீக்கம்**
**(காலாண்டு ரீதியாக, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண், ஆண்டிற்காண்டு, %)**
*2025 சனவரி மாத நாணய கொள்கைச் சுற்றின் எறிவுகளின் அடிப்படையில்*





மூலம்: மத்திய வங்கி அலுவலர் எறிவுகள்

*வீச்சு வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள 2022 கா4 வரையான அடையப்பட்ட தரவுகள் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2013=100, பருவகாலரீதியில் சீராக்கப்பட்டது) அடிப்படையிலமைந்துள்ள வேளையில், இக்காலப் பகுதிக்குப் பின்னரான தரவுகள் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2021=100, பருவகாலரீதியில் சீராக்கப்பட்டது) அடிப்படையிலமைந்துள்ளன.*

**குறிப்பு: எதிர்வுகூறல் என்பது வாக்குறுதியோ அன்றில் கடப்பாடோ அல்ல**

2025 சனவரி மாத நாணயக் கொள்கைச் சுற்றில் கிடைப்பனவாக இருந்த தரவுகள், மேற்கொள்ளப்பட்ட ஊகங்கள் மற்றும் தீர்மானங்கள் என்பவற்றை எறிவுகள் பிரதிபலிக்கின்றன. உலகளாவிய வலு மற்றும் உணவு விலைகள்; இலங்கையின் முக்கிய வர்த்தகப் பங்காளர்களின் படிப்படியான வளர்ச்சி மீட்சி; பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதித்திட்டத்துடன் இசைந்து செல்லும் விதத்தில் எதிர்பார்க்கப்படுகின்ற உள்நாட்டு இறைப் பாதை; மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் நாணயக் கொள்கை நிலையினால் குறித்துக்காட்டப்படுகின்ற உலகளாவிய நிதியியல் நிலைப்பாடுகள் ஆகிய எதிர்வுகூறல்களின் மீதான நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும். மேலும், எறிவுகள் மாதிரியுருவிற்கு ஒத்திசைவான வட்டி வீதப் பாதை மற்றும் தோற்றம்பெறுகின்ற பேரண்டப்பொருளாதார பதிலிறுப்புக்கள் என்பன மீதான நிபந்தனைகளுக்குட்பட்டவையாகும். மேலும், அடிப்படை எறிவுகளில் முக்கிய பேரண்டப்பொருளாதார கொள்கை நகர்வுகளெதுவும் எதிர்பார்க்கப்படுவதில்லை. ஆதலால், பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் தொடர்ச்சி, இறைத் திரட்சி மீதான முயற்சிகள் என்பன உள்ளார்ந்தமாகக் குறித்துக்காட்டப்படுகின்றன. இவ்வூகங்களில் காணப்படும் ஏதேனும் குறிப்பிடத்தக்க மாற்றம் எறிவுசெய்யப்பட்ட பாதையிலிருந்து அடையப்பட்ட பணவீக்கப் பாதை விலகுவதற்கு வழிவகுக்கக்கூடும். வீச்சு வரைபடங்களுடன் இணைந்து, நடுத்தர கால பேரண்டப்பொருளாதார எறிவுகள், ஒவ்வொரு நாணயக் கொள்கைச் சுற்றிலும் தொடர்ச்சியாக இற்றைப்படுத்தப்படும். தளம்பலான உலகளாவிய சூழல் மற்றும் உள்நாட்டுப் பொருளாதாரம் என்பவற்றிலுள்ள நிச்சயமற்றதன்மைகள் என்பவற்றினைக் கருத்திற்கொண்டு, அடிப்படை எதிர்வுகூறல்கள் பல்வேறு உள்ளார்ந்த ஆற்றல்வாய்ந்த மேல்நோக்கிய மற்றும் கீழ்நோக்கிய இடர்நேர்வுகளிற்கு உள்ளாகின்றன. அடிப்படை எதிர்வுகூறலிற்கான இடர்நேர்வுகள் தொடர்பிலான விவரங்கள் ‘‘எறிவுகளிற்கான இடர்நேர்வுகள்’’ பிரிவில் கலந்துரையாடப்பட்டுள்ளன.

**வரைபடம் 02: எறிவுசெய்யப்பட்ட மையப் பணவீக்கம்**
**(காலாண்டு ரீதியாக, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண், ஆண்டிற்காண்டு, %)**
*2025 சனவரி மாத நாணய கொள்கைச் சுற்றின் எறிவுகளின் அடிப்படையில்*




மூலம்: மத்திய வங்கி அலுவலர் எறிவுகள்


*வீச்சு வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள 2022 கா4 வரையான அடையப்பட்ட தரவுகள் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2013=100, பருவகாலரீதியில் சீராக்கப்பட்டது) அடிப்படையிலமைந்துள்ள வேளையில், இக்காலப் பகுதிக்குப் பின்னரான தரவுகள் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2021=100, பருவகாலரீதியில் சீராக்கப்பட்டது) அடிப்படையிலமைந்துள்ளன.*

மேலேயுள்ள வரைபடம் 01இலுள்ள விளக்கக்குறிப்பைப் பார்க்கவும்.

வலு மற்றும் போக்குவரத்துப் பணவீக்கமானது அண்மைய காலத்தில் ஆண்டிற்கு ஆண்டு முதன்மைப் பணவீக்கத்திற்கு எதிர்மறையாகப் பங்களித்து தொடர்ந்தும் மெதுவடைந்து காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இருப்பினும், வலு மற்றும் போக்குவரத்துடன் தொடர்புடைய விலைகளில் படிப்படியான இயல்புநிலைக்குத்திரும்பலொன்று எறிவுசெய்யப்பட்டுள்ளது. தளம்பல்நிலைக்கு மத்தியிலான உலகளாவிய விலை மட்டங்களுடன் இணைந்து இலங்கை ரூபாவின் நகர்வுகளுடன் வலு மற்றும் போக்குவரத்துத் துறைகளுடன் தொடர்புடைய உள்நாட்டு விலைகள் சில மேல்நோக்கிய அழுத்தங்களைக் கொண்டிருக்கக்கூடுமென்பதுடன் இது வலு மற்றும் போக்குவரத்துப் பணவீக்கத்தினை அதன் தற்போதைய மெதுவடைந்த மட்டத்திலிருந்து இயல்புநிலைக்குத் திரும்புவதற்குப் பங்களிக்கும். மேலும், இப்பாதை, எதிர்வரவுள்ள மின்சாரத் தீர்வைத் திருத்தச் சுற்றுக்களில் மேற்கொள்ளப்படும் திருத்தங்களின் மூலமும் செல்வாக்கிற்குட்படலாம். இருப்பினும், அண்மைய மாதங்களில் காணப்பட்ட நிலையற்ற உலகளாவிய எண்ணெய் விலை நடத்தை மற்றும் நிச்சயமற்ற வானிலைப் போக்குகளின் காரணமாக மின்சார உருவாக்கக் கலவையின் நிச்சயமற்றதன்மை என்பவற்றினால் பிரதிபலிக்கப்பட்டவாறு, மேற்கூறப்பட்ட எதிர்வுகூறல்களுடன் தொடர்புடைய நிச்சயமற்றதன்மைகள் மிகவும் உயர்ந்தளவில் காணப்படுகின்றன. மேலும், நிரம்பல் காரணிகளினால் பாரியளவில் பங்களிக்கப்படுகின்ற தளம்பலடைகின்ற உணவு வகையின் பணவீக்கமானது அண்மைய காலத்தில் ஓரளவு உயர்வடைந்து காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. குறிப்பாக 2024இன் நான்காம் காலாண்டில் வேளாண்மைத் துறையின் எதிர்பார்க்கப்பட்ட மெதுவடைந்த செயலாற்றத்தின் காரணமாக

அண்மைய காலத்தில் எதிர்பார்க்கப்படும் தாழ்ந்தளவிலான வேளாண்மைசார் வெளியீடும் இந்நடத்தைக்குப் பங்களிக்கின்றது.

**வரைபடம் 03: முதன்மைப் பணவீக்கம்: உத்வேகம் மற்றும் தளத் தாக்கம்[4]**
**(கொ.நு.வி.சுட்டெண், 2021=100)**




மூலம்: மத்திய வங்கி அலுவலர் கணிப்புக்கள்

## சிறப்புக்குறிப்பு அ: பணவீக்க வீச்சு வரைபடத்தை எப்படி விளங்கிக்கொள்வது[§]

பணவீக்க வீச்சு வரைபடம் என்பது பணவீக்க எறிவுகளைத் தெரிவிப்பதற்கும் எறிவு தொடர்பான நிச்சயமற்றதன்மையை குறிகாட்டும் ஓர் முறையாகும். பொதுவாக, தொலைதூர எதிர்காலம் குறித்த எறிவுகள் குறுகிய காலத்திற்கான எறிவுகளை விட மிகவும் நிச்சயமற்றவையாகும். எனவே, வீச்சு வரைபடங்கள் பெரும்பாலும் நம்பிக்கை இடைவெளிகளால் வகைப்படுத்தப்படுத்தப்பட்டு அவை எதிர்காலத்தில் மேலும் செல்லும்போது படிப்படியாக விரிவடைகின்றன. நடைமுறையில், வீச்சு வரைபடங்கள் அண்மைய காலத்தில் பதிவுசெய்யப்பட்ட தரவுகள் பற்றிய சில தகவல்களையும் உள்ளடக்கின்றன. பல மத்திய வங்கிகள் பேரண்டப் பொருளாதார மாறிகள் பற்றிய தங்கள் எறிவுகளை பொருளாதார பங்குதாரர்களுக்கு தெரிவிக்க ஒரு தகவல்தொடர்பு கருவியாக வீச்சு வரைபடங்களை பயன்படுத்துகின்றன.

இலங்கை மத்திய வங்கி பணவீக்க வீச்சு வரைபடத்தை தொடர்ந்து வெளியிட்டு இது தலைப்பு பணவீக்கத்தின் எறிவுசெய்யப்படுகின்ற பாதையை எடுத்துக்காட்டுகிறது. இது ஒவ்வொரு நாணயக் கொள்கை சுற்றிலும் புதுப்பிக்கப்படுகிறது. மத்திய வங்கி நடுத்தர கால பணவீக்க எறிவுகளுடன் மற்ற முக்கிய


---

[4] பணவீக்கம் என்பது விலை மட்டத்தில் ஆண்டிற்காண்டு மாற்றத்தினால் பொதுவாக அளவிடப்படுகின்றது. அதாவது முன்னைய ஆண்டின் அதையொத்த காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் விலைச் சுட்டெண்ணினால் (இலங்கையைப் பொறுத்தவரையில், தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் இலங்கையில் பணவீக்கத்தை அளவிடுவதற்கு பயன்படுத்தப்படும் இரு முக்கிய சுட்டெண்களான கொ.நு.வி.சுட்டெண் மற்றும் தே.நு.வி.சுட்டெண்களை தொகுத்து வெளியிடுகின்றது). கருத்திற்கொள்ளப்படும் காலப்பகுதியொன்றின் விலைமட்டத்தின் சதவீத மாற்றத்தினால் அளவிடப்படுகின்றது. எவ்வாறாயினும், விலைத் தகவல்கள் மாதாந்த கால இடைவெளியில் கிடைப்பனவாக உள்ளது. எனவே, ஒருவர் மாதத்திற்கு மாத அடிப்படையிலும் விலைகளின் மாற்றங்களை கணிப்பிடலாம். ஒரு மாதத்திலிருந்து அடுத்த மாதத்திற்கான ஆண்டிற்காண்டு பணவீக்கத்தின் மாற்றத்தை தற்போதைய மாதத்தின் மாதத்திற்கு மாத பணவீக்கத்திலிருந்து முன்னைய ஆண்டின் தொடர்பான மாதத்தின் மாதத்திற்கு மாத பணவீக்கத்தை கழிப்பதன் மூலம் அண்ணளவாக்கலாம் (இத்தகைய அண்ணளவானது சதவீத மாற்றங்களை மடக்கை வேறுபாடுகள் மூலம் அண்ணளவாக்க முடியும் என்ற உண்மையின் மூலம் ஊக்குவிக்கப்படுகின்றது). இதற்கமைய, தற்போதைய மாதத்தின் மாதத்திற்கு மாத பணவீக்கம் பொதுவாக உத்வேகம் என அழைக்கப்படுகின்றது. இது, அண்மைய மாதத்தில் பொருளாதார அபிவிருத்திகளின் காரணமாக எவ்வாறு ஆண்டிற்காண்டு பணவீக்கம் மாற்றமடைகின்றது என்பதை பிரதிபலிக்கின்றது. அதேவேளை, முன்னைய ஆண்டின் தொடர்புடைய மாதத்தில் மாதத்திற்கு மாத பணவீக்கத்தின் எதிர்மறையான பெறுமதி தளத் தாக்கம் என அழைக்கப்படுகின்றது. இது, எவ்வாறு ஆண்டிற்காண்டு பணவீக்கம் ஒரு மாதத்திலிருந்து அடுத்த மாதத்திற்கு மாறுவதற்கு புள்ளிவிபரத்தாக்கம் தாக்கம் செலுத்துகின்றது என்பதனை வகைகூறுகின்றது (அதாவது., ${\pi_t}^{YoY} \approx {\pi_{t-1}}^{YoY}$ + உத்வேகம் + தளத் தாக்கம், இங்கே $\pi$ என்பது பணவீக்கத்தை குறிக்கின்றது). இப்பாகுபாடானது ஆண்டிற்காண்டு பணவீக்கத்தின் இயக்கவாற்றலுக்கான முக்கிய பங்களிப்புக் காரணிகளை மதிப்பிடுவதற்கு ஆய்வாளர்களை அனுமதிக்கின்றது. மத்திய வங்கியின் மாதிரி எறிவுகளில் உள்ளவாறு காலாண்டு ரீதியான தகவல்கள் பயன்படுத்தப்படும் போது, உத்வேகம் மற்றும் தளத்தாக்கம் என்பவற்றிற்கு ஆண்டிற்காண்டு பணவீக்கத்தின் அதையொத்த வகைப்படுத்தலானது காலண்டிற்கு காலாண்டு பணவீக்கத்தைப் பயன்படுத்தியும் மேற்கொள்ளப்படலாம். மேலும், இவ்வணுகலானது பணவீக்கத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டதல்ல எனினும் எந்த மாறிகளுக்கும் ஆண்டிற்காண்டு மாற்றங்களை கணிக்கப் பயன்படுத்தலாம்.

பேரண்டப்பொருளாதார மாறிகளின் எறிவுகளையும் பகுதியளவிலான கட்டமைப்புச்சார் பேரண்டப்பொருளாதார மாதிரியைப் பயன்படுத்துகிறது. உண்மைத் தரவுகள், முக்கிய உலகளாவிய குறிகாட்டிகளின் எறிவுகள், தேர்ந்தெடுக்கப்பட்ட மாறிகளின் குறுகிய கால எறிவுகள் மற்றும் எடுகோள்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி எறிவுகள் செய்யப்படுகின்றன.

பணவீக்க வீச்சு வரைபடத்தை கருத்திற்கொள்ளும்போது, மத்திய வங்கி 50%, 70% மற்றும் 90% நம்பிக்கை இடைவெளிகளை படிப்படியாக மங்கலாகும் நிறங்களைக் கொண்ட பகுதிகளாக வெளியிடுகிறது. இந்த நம்பிக்கை இடைவெளிகள் எறிவு மேற்கொள்ளும் திகதியில் கிடைக்கக்கூடிய தகவல்களைக் கருத்திற்கொண்டு, பணவீக்கத்தின் சாத்தியமான பெறுமானங்களைக் குறிக்கும் என்று விளக்கப்படலாம். எடுத்துக்காட்டாக, படம் ஆ.1 2025 சனவரியின் எறிவுச் சுற்றில் உருவாக்கப்பட்ட பணவீக்க வீச்சு வரைபடத்தை விளக்குகிறது. இந்த வீச்சு வரைபடத்தில் 50% நம்பிக்கை இடைவெளி என்பது பதிவுசெய்யப்பட்ட பணவீக்கம் 50 சதவீத வாய்ப்புடன் இந்த எல்லைக்குள் காணப்படலாம் என்பதனை எடுத்துக்காட்டுகிறது. இது 2025 சனவரி சுற்றில் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் எறிவுசெய்யப்பட்டுள்ளது.

**வரைபடம் அ.1: பணவீக்க வீச்சு வரைபடமொன்றின் முக்கிய கூறுகள்**
**முதன்மைப் பணவீக்க எறிவுகள் (காலாண்டு, கொ.நு.வி.சுட்டெண், ஆண்டிற்காண்டு, %)**
*2025 சனவரி மாத நாணயக் கொள்கைச் சுற்றில் மேற்கொள்ளப்பட்ட எறிவுகளின் அடிப்படையிலமைந்துள்ளது*




மூலம்: இலங்கை மத்திய வங்கியின் அலுவலர் எறிவுகள்

§ மேலும் விரிவான விளக்கத்திற்கு, மத்திய வங்கியின் இணையதளம் வழியாக அணுகக்கூடிய "ABCs of the Inflation Fan Chart", என்ற தகவல் தொடர் கட்டுரையைப் பார்க்கவும்.

***பணவீக்க எதிர்பார்க்கைகள்***

மத்திய வங்கியின் பணவீக்க எதிர்பார்க்கைகள் தொடர்பான அளவீட்டின் பிரகாரம், 2024 திசெம்பரில் பதிவுசெய்யப்பட்ட பணச்சுருக்கத்தின் சிறியளவிலான குறைவுடன் இசைந்து செல்லும் விதத்தில், கம்பனித் துறையின் பணவீக்க எதிர்பார்க்கைகள் 2025 சனவரியில் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் அநேகமான தவணைகளில் அதிகரித்துக் காணப்பட்டன. அதேவேளை, 2025 சனவரி மாத அளவீட்டுச் சுற்றின் பிரகாரம், அரச செலவினம் மற்றும் கூலிகள் என்பவற்றில்

எதிர்பார்க்கப்படும் அதிகரிப்பு, தனியாள் பயன்பாட்டு வாகனங்கள் மீதான இறக்குமதித் தடையின் தளர்த்தலுடனான ரூபாவின் பெறுமானத்தேய்வு, உலகளாவிய பண்ட விலைகளின் அதிகரிப்பு மற்றும் பண்டிகை மாதங்களில் உயர்ந்தளவிலான கேள்வி என்பன காரணமாக, 3 மாதங்களிலிருந்து நீண்ட கால தவணைகள் வரை எதிர்பார்க்கப்படும் பணவீக்கத்தில் படிப்படியானதோர் உயர்வு பதிவுசெய்யப்படக்கூடும். இருப்பினும், தற்போதைய பணச்சுருக்க நிலைமைகளைப் பிரதிபலிக்கின்ற வகையில், அனைத்து தவணைகளுக்கான பணவீக்க எதிர்பார்க்கை மட்டமானது 5 சதவீத பணவீக்க இலக்கினை விட மிகவும் கீழாகத் தொடர்ந்தும் காணப்படுகின்றது.

**உண்மை பொருளாதார வளர்ச்சிக்கான வாய்ப்புக்கள்**

முன்னோக்கிய பொருளாதார குறியீடுகள், அளவீட்டு கண்டுபிடிப்புகள் மற்றும் ஊழியர்களின் மதிப்பீடுகளின் அடிப்படையில், 2024இன் நான்காம் காலாண்டில் உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியானது வலுவானதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது 2024 இன் முதல் மூன்று காலாண்டுகளில் காணப்பட்ட நேர்மறையான வேகததின் தொடர்ச்சியாகும். இந்த செயலாற்றம் முக்கியமாக கைத்தொழில் துறை நடவடிக்கைகளின் ஆரோக்கியமான செயலாற்றத்தினால் உந்தப்பட்டதாகயிருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கேற்ப, 2024 ஆம் ஆண்டிற்கான பொருளாதார வளர்ச்சி ஏறத்தாழ 5 சதவீதமாக இருக்கும் என்று எறிவுசெய்யப்படுகிறது.


குறுகிய கால பொருளாதார வளர்ச்சிப் பாதை உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மிதமான வளர்ச்சியைக் குறிக்கிறது. முன்னைய எறிவுகளுடன் ஒப்பிடுகையில் முக்கியமாக குறைந்த வட்டி வீதங்களிலிருந்து எழும் அதிகரித்த இறை இடைவெளியினால் குறுகிய காலத்தில் இறைக் கொள்கையிலிருந்து ஓரளவான விரிவாக்க வளர்ச்சி ஆதரவு இருக்கக்கூடும். மேலும், இறை இடைவெளியிலிருந்து பெறப்படும் விரிவாக்க வளர்ச்சி சார்ந்த ஆதரவு காரணமாக நேர்மறையான வெளியீட்டு இடைவெளி தற்காலிகமாக விரிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வளர்ச்சிக்கு ஆதரவான கட்டமைப்பு சீர்திருத்தங்கள் எதையும் உள்ளடக்காத தற்போதைய தகவல்களின் அடிப்படையில், பொருளாதாரம் நடுத்தர காலத்தில் அதன் முழு இயலாற்றத்திற்கும் பார்க்க் குறைவாகவே செயல்படும் என்று எறிவுசெய்யப்படுகிறது.

இறுக்கமான உண்மை நாணய நிலைமைகளின் தளர்த்தல் என்பது முதலீடுகளை ஊக்குவிப்பதன் மூலமும், நுகர்வோர் செலவினங்களை அதிகரிப்பதன் மூலமும், இறுதியில் மொத்த தேவையை அதிகரிப்பதன் மூலமும் வளர்ச்சியைத் தூண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையில், இலங்கையின் முக்கிய வர்த்தக பங்காளர்களின் வளர்ச்சி எறிவுகளின்படி சில பொருளாதாரங்களில் ஓர் மீட்சியை சுட்டிக்காட்டுகின்றன. ஆயினும்கூட, நேர்மறையான வெளிநாட்டு உற்பத்தி இடைவெளி நடுத்தர காலத்தில் குறுகி அதன் பின்னர் எதிர்மறையாகவும் மாறும் என்று மதிப்பீடு செய்யப்படுகிறது. இது வெளிநாட்டுக் கேள்வியில் ஓர் தேக்கநிலையைக் குறிக்கிறது. இருப்பினும், அமெரிக்காவின் வர்த்தகம் தொடர்பான கொள்கைகளில் ஏற்படும் மாற்றங்கள் வரவிருக்கும் காலப்பகுதியில் இந்த பாதையில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். மேலதிகமாக, உள்நாட்டு சேவைகள், குறிப்பாக சுற்றுலாவுக்கான வெளிநாட்டுக் கேள்வி வலுவாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நடுத்தர காலத்தில் பொருளாதார வளர்ச்சிப் பாதை கணிசமான நிச்சயமற்ற தன்மைக்கு உட்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த சூழலில், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சேமிப்புகளால் ஆதரிக்கப்படும் முதலீட்டு நடவடிக்கைகளில் ஓர் நிலைத்திருக்கக்கூடிய அதிகரிப்பு என்பது தற்போதைய வளர்ச்சி வேகத்தை பேணுவதில் தீர்க்கமானதாக இருக்கும். இதற்கிடையில், பொருளாதாரம் நடுத்தர காலத்தில் அதன் முழு உள்ளாற்றலை அடைய திட்டமிடப்பட்ட கட்டமைப்புச்சார் சீர்திருத்தங்களைத் தொடர்வதும் நடைமுறைப்படுத்துவதும் முக்கியமானதாகும். இது தொடர்பில் உற்பத்தித்திறனை மேம்படுத்துவது, ஏற்றுமதி உள்ளாற்றலை அதிகரிப்பது மற்றும் கட்டமைப்புச்சார் இயக்கத்தடைகளை குறைப்பதன் மூலம் வளர்ச்சி தடைகளை சமாளித்தல் என்பவை உயர் வளர்ச்சியை நிலைத்திருக்கக்கூடிய வகையில் அடைவதற்கு முக்கியமாகும்.

**வரைபடம் 04: எறிவுசெய்யப்பட்ட காலாண்டு ரீதியான உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி (ஆண்டிற்காண்டு, %)**

*2025 சனவரி மாத நாணய கொள்கைச் சுற்றின் எறிவுகளின் அடிப்படையில்*




மூலம்: மத்திய வங்கி அலுவலர் எறிவுகள்

மேலேயுள்ள வரைபடம் 01இலுள்ள விளக்கக்குறிப்பைப் பார்க்கவும்.

## 2.2. எதிர்வுகூறலுக்கு அடிப்படையாகவிருக்கும் முக்கிய எடுகோள்கள்

நடுத்தர கால எதிர்வுகூறல்களை அடைவதில் பயன்படுத்தப்பட்ட முக்கிய எடுகோள்களின் சுருக்கம் இப்பகுதியில் தரப்பட்டுள்ளது.

### உலகளாவிய சூழல்

உலகளாவிய எறிவு மாதிரியுரு வலையமைப்பிற்கமைய[5], உலகப் பொருளாதாரமானது 2024ஆம் ஆண்டில் 3.1 சதவீதம் கொண்ட வளர்ச்சி வீதத்தை அடையுமென எறிவுசெய்யப்படுகின்றது. நடுத்தர

[5] மத்திய வங்கியானது நடுத்தரகால எறிவுகளுக்கான உள்ளீடுகளாக உலகளாவிய எறிவு மாதிரியுரு வலையமைப்பினால் தயாரிக்கப்பட்ட உலகளாவிய பேரண்ட பொருளாதார குறிகாட்டிகளின் எறிவுகளைப் பயன்படுத்தப்படுகின்றது. 2025 சனவரி நாணயக் கொள்கைச் சுற்றில் பயன்படுத்தப்பட்ட எறிவுகள் 2025 சனவரி 21 அன்று கிடைக்கப்பெற்ற உலகளாவிய எறிவு மாதிரியுரு வலையமைப்பு எறிவுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

காலத்தில் உலகளாவிய வளர்ச்சியில் ஒரு சிறிய மெதுவடைவு எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வெறிவுகளை அடிப்படையாகக் கொண்டு பெறப்பட்ட ஏற்றுமதி நிறையேற்றப்பட்ட வெளிநாட்டு வெளியீட்டு இடைவெளியானது[6], முக்கியமாக அமெரிக்காவில் எதிர்பார்க்கப்பட்ட மீட்சி காரணமாக அண்மைக்காலத்தில் நேர்மறையாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இருப்பினும் கூட, ஏற்றுமதி நிறையேற்றப்பட்ட வெளிநாட்டு வெளியீட்டு இடைவெளியானது ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், மற்றும் யூரோ வலய நாடுகளில் எதிர்பார்க்கப்பட்ட மெதுவடைதலினால் தூண்டப்பட்டு 2026 நடுப்பகுதியிலிருந்து எதிர்மறையாக மாறுமென எதிர்பார்க்கப்படுகின்றது. முதன்மைப் பணவீக்கமானது குறிப்பாக, தொடர்ச்சியான பணிகள் பணவீக்கம் காரணமாக பல முக்கிய பொருளாதாரங்களில் மத்திய வங்கி இலக்குகளை விட அதிகமாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. உலகளாவிய எறிவு மாதிரி வலையமைப்பு எறிவுகளுக்கமைய, ஐக்கிய அமெரிக்காவின் பெடரல் ரிசேர்வ் 2025இல் பெடரல் நிதிய வீதத்தைக் குறைப்பதில் எச்சரிக்கையான அணுகுமுறையைப் பின்பற்றுமென எதிர்பார்க்கப்படுகின்றது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது 2025இல் சராசரி பிறன்ட் மசகெண்ணெய் விலை குறைவாக இருக்குமென எதிர்பார்க்கப்படுவதுடன் 2026இல் மேலும் சரிவொன்று எதிர்பார்க்கப்படுகின்றது. மத்திய கிழக்கின் போர் நிறுத்த உடன்படிக்கை, பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பின் கீழ் வராத பொருளாதாரங்களினால் அதிகரிக்கப்பட்ட உற்பத்தி மற்றும் உலகளாவிய கேள்வியை தளர்த்துவதற்கான எதிர்பார்ப்புகள் ஆகியவை மேற்கூறிய போக்கின் சார்பாக வாதிடுகின்றன. அதேவேளை, உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு உணவுச் சுட்டெண் 2024இனை விட சராசரியாக உயர்வாகவிருக்குமென எதிர்பார்ப்பதுடன் உலகளாவிய உணவு விலைகள் உயருமென எதிர்பார்க்கப்படுகின்றது. உலகளாவிய உணவு விலைகளின் படிப்படியான அதிகரிப்பு, வரட்சி மற்றும் வெள்ளம் போன்ற காலநிலை தொடர்பான இடையூறுகள் மீண்டும் நிகழும் அபாயங்களைப் பிரதிபலிக்கின்றது.

**இறைப் பாதை**

பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதிக்கிணங்க படுகடன் மறுசீரமைப்புச் சூழ்நிலை, அதேபோல தற்போதுள்ள இறைத் திரட்சி வழிமுறைகள், அடிப்படை எறிவுகளுக்கு பயன்படுத்தப்படும் இறை நிலுவைகளில் பிரதிபலிக்கின்றன.

**வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு**

2024 மற்றும் 2025ஆம் ஆண்டுகளில் ஆரோக்கியமான நடைமுறைக் கணக்கு மிகை மற்றும் சிறிதளவு பற்றாக்குறை ஆகியவை முறையே கருதப்படுகின்றன. ஆரம்ப எறிவுகளை விட குறைவடைந்த வர்த்தகப் பற்றாக்குறை, சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் மற்றும் அதிகரித்த தொழிலாளர் பணவனுப்பல்கள் என்பனவற்றின் விளைவாக 2024இற்காக அனுமானிக்கப்பட்ட மிகை தற்போதைய நாணயக் கொள்கைச் சுற்றில் திருத்தப்பட்டுள்ளது. 2025இற்காக அனுமானிக்கப்பட்ட பற்றாக்குறையானது முக்கியமாக வாகன இறக்குமதிகள் மீள ஆரம்பிக்கப்பட்டதன் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட உயர்ந்த வர்த்தகப் பற்றாக்குறையினால் உந்தப்பட்டுள்ளது.

[6] இலங்கையின் ஆறு முக்கிய வர்த்தகப் பங்காளர்களுடன் தொடர்புடைய ஏற்றுமதிகளின் இயல்பு நிலைப்படுத்தப்பட்ட பங்குகளைப் பயன்படுத்தி உலகளாவிய எறிவு மாதிரி வலையமைப்பின் எறிவுகளில் தரப்பட்டுள்ள வர்த்தகப் பங்காளர்களின் நிறையேற்றப்பட்ட சராசரி வெளியீட்டு இடைவெளிகளாக ஏற்றுமதி நிறையேற்றப்பட்ட வெளிநாட்டு வெளியீட்டு இடைவெளி கணிக்கப்பட்டுள்ளது.

### 2.3. எதிர்வுகூறல்களுக்கான இடர்நேர்வுகள்

பணவீக்கம் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி என்பவற்றின் அடிப்படை எறிவுகளிற்கு மேல்நோக்கிய மற்றும் கீழ்நோக்கிய இடர்நேர்வுகள் ஆகிய இரண்டுமே காணப்படுகின்றன. 2025 சனவரியில் நாணயக் கொள்கைச் சுற்றிற்கமைவாக அத்தகைய இடர்நேர்வுகளின் வெளிப்படுத்துகை இப்பிரிவில் வழங்கப்படுகின்றது.

**பணவீக்க எதிர்வுகூறல்களுக்கான இடர்நேர்வுகள்**

கீழ்நோக்கிய இடர்நேர்வுகளினைக் கருத்திற்கொள்ளும்போது, அண்மைய வலுவுடன் தொடர்புடைய விலைக் குறைப்புக்கள் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க உயர்ந்தளவிலான இரண்டாவது சுற்றுத் தாக்கங்களைத் தோற்றுவித்து, பணவீக்கத்தினைக் கீழ்நோக்கி உந்தச்செய்யக்கூடும். பொதுமக்களின் உயர்ந்தளவிலான வாழ்க்கைச் செலவினைக் குறைக்கும் விதத்திலான பல்வேறு வழிமுறைகளை மேற்கொள்வதாக அரசாங்கம் உறுதியளித்துள்ள போதிலும் அத்தகைய எதிர்பார்க்கப்பட்ட விலைத் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டிய நேரமும் அவற்றின் அளவும் நிச்சயமற்றதாகத் தொடர்ந்தும் காணப்படுகின்றது. 2025ஆம் ஆண்டிற்கான எதிர்வரவுள்ள தேசிய ரீதியிலான வரவு செலவுத்திட்டத்தின் இறுதிப்படுத்தலானது எறிவுசெய்யப்பட்ட பாதையினை அடைவதில் சில நிச்சயதன்மைகளை வழங்கும். இவை கிடைக்கப்பெற்றவுடன் எதிர்வரவுள்ள நாணயக் கொள்கைச் சுற்றுக்களில் இம்மேலதிகத் தகவல்கள் உட்சேர்க்கப்படும். மேலும், பொதுமக்களின் குறைவடைந்துவரும் கொள்வனவுச் சக்தியின் நீடித்த தாக்கமானது எதிர்பார்த்ததிலும் பார்க்க நீண்ட காலத்திற்குக் கேள்வி நிலைமைகளைக் கட்டுப்படுத்தி, அதன்மூலம் கீழ்நோக்கிய விலை அழுத்தங்களை ஏற்படுத்தக்கூடும்.

பல்வேறு மேல்நோக்கிய இடர்நேர்வுகள் பணவீக்கத்தினை எறிவுசெய்யப்பட்ட பாதையை விட உயர்ந்தளவிலானதொரு எறிவுப்பாதையில் வழிநடத்தக்கூடும். சாத்தியமான பாதகமான வானிலை நிலைமைகள் குறிப்பாக, மழையுடனான வானிலையானது அறுவடைக் காலப்பகுதி வரை தொடர்ந்தால், வேளாண்மை உற்பத்தியினை எதிர்மறையாகப் பாதித்து, உணவுப் பணவீக்கத்தின் மீது மேல்நோக்கிய அழுத்தத்தினை உருவாக்கக்கூடும். மேலும், நடுத்தர காலத்தில், ஏதேனும் கணிக்க முடியாத தன்மையிலான வானிலைப் போக்குகள் வலு உருவாக்கத்திற்கான நீர்மின் உற்பத்தியில் தங்கியிருப்பதனைப் பாதிப்படையச்செய்து, வலு விலைகளுக்கு மேல்நோக்கிய இடர்நேர்வுகளை உருவாக்கக்கூடும். வியாபாரங்கள் அத்தகைய அதிகரித்த செலவுகளை நுகர்வோர் மீது திணித்தலுடன் தனியார் துறையின் கூலி அதிகரிப்புக்கள் மேலதிக விலை அதிகரிப்புக்களுக்கு வழிவகுக்கக்கூடும். அதேவேளை, அடையப்படுமாயின், திட்டமிடப்பட்ட இறைத் திரட்சிப் பாதையிலிருந்தான சாத்தியமான விலகல்களின் இடர்நேர்வானது அதிகரித்தளவிலான செலவினங்களினூடாகப் பணவீக்க அழுத்தங்களிற்கு வழிவகுக்கக்கூடும். மேலும், அத்தியாவசியப் பொருட்களுடன் தொடர்புடைய நிரம்பல் கட்டுப்பாடுகள் அண்மைய காலத்தில் மேலதிக விலை உயர்வுகளிற்கு வழிவகுக்கக்கூடும். மேலும் ஏதேனும் ரூபாவின் சாத்தியமான அதிகப்படியான பெறுமதி தேய்வானது பணவீக்க அழுத்தங்களுக்கு இட்டுச்செல்லக்கூடும். ஐக்கிய அமெரிக்கக் கொள்கை மாற்றங்களுடன், இறக்குமதிசெய்யப்பட்ட பொருட்கள் மீதான தீர்வை அதிகரிப்புக்கள் மற்றும் தொழிலாளர் சந்தைகளை இறுக்கமடையச்செய்யக்கூடிய கொள்கை வழிமுறைகள் என்பவற்றினால் உந்தப்பட்டு ஐக்கிய அமெரிக்க பணவீக்கத்திற்கான மேல்நோக்கிய இடர்நேர்வுகள் அதிகரித்துள்ளன. மேலும், உலகளாவிய விலை உயர்வுகளிற்கான சில சாத்தியத்தன்மைகளுடன்

உலகளாவிய உணவு மற்றும் வலு விலைகள் குறித்த அதிகரித்த நிச்சயமற்றதன்மையானது தொடர்கின்றது. இத்தகைய இடர்நேர்வுகளின் பொருண்மியமாதலானது உலகளாவிய பணவீக்கத் தோற்றப்பாட்டில் கசிவுத்தாக்கங்களை ஏற்படுத்தக்கூடுமென்பதுடன், இது உயர்ந்தளவிலான இறக்குமதிசெய்யப்பட்ட பணவீக்கத்தின் காரணமாக இலங்கையின் பணவீக்கத் தோற்றப்பாட்டினை மோசமாகப் பாதிக்கக்கூடும்.

உணவுப் பணவீக்கம் மீதான பாதகமான வானிலைத் தாக்கம், இலங்கை ரூபா குறித்த சாத்தியமான பெறுமானத்தேய்வு அழுத்தம் மற்றும் உயர்வடைந்த உலகளாவிய நிச்சயமற்றதன்மைக்கு மத்தியில் உலகளாவிய எண்ணெய் மற்றும் உணவு விலைகளில் உயர்ந்தளவிலான தளம்பல் போன்ற பல்வேறு காரணிகளிலிருந்தான மேல்நோக்கிய இடர்நேர்வுகளுடன் இணைந்து இதுவரையான காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட மின்சாரத் தீர்வைக் குறைப்புக்களின் இரண்டாம் சுற்றுத் தாக்கங்களின் சாத்தியத்தன்மையுடன் பணவீக்க எறிவுகளிற்கான இடர்நேர்வுகள் அண்மைய மற்றும் நடுத்தர ஆகிய இரு காலப்பகுதியிலும் சமநிலையாகக் காணப்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

**பொருளாதார வளர்ச்சி எதிர்வுகூறல்களுக்கான இடர்நேர்வுகள்**


அண்மைய காலத்திலிருந்து நடுத்தர காலத்திலான வளர்ச்சி எறிவுகளுக்குச் சாத்தியமான பிரதான கீழ்நோக்கிய இடர்நேர்வுகளானது ஏனையவற்றிற்கிடையில், வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பிற்கான தொழிலாளர்களின் பாரியளவிலான புறப்படுகைகள் மற்றும் தொழில்சார் நிபுணர்களின் புலம்பெயர்வு ஆகியவற்றினை உள்ளடக்கியுள்ளதுடன் அனுபவம்வாய்ந்த பணியாளர்களின் இழப்பானது உற்பத்தித்திறனில் நீடித்த வீழ்ச்சியொன்றினையும் ஒட்டுமொத்த பொருளாதார வெளியீட்டிற்கு இடையூறுகளையும் ஏற்படுத்தக்கூடுமென்பதனால் இது நிறுவனங்களினுள் இடைவெளிகளுக்கு வழிவகுக்கலாம். மேலும், வேளாண்மை உற்பத்தி மற்றும் உணவு பதப்படுத்தல் துறைகளின் அதிகரித்தளவிலான கூருணர்திறன் மற்றும் இத்தகைய நிகழ்வுகளிற்கான மின்சார உருவாக்கம் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, காலநிலை மாற்றமானது நடுத்தர காலத்தில் இலங்கையின் பொருளாதார நடவடிக்கைகளை பாதிக்கலாம். மேலும், உலகளாவிய நிச்சயமற்றதன்மைகள் குறிப்பாக, ஐக்கிய அமெரிக்காவின் அரசியல் மாற்றங்கள் காரணமாக, வெளிநாட்டுத் துறைச் செயலாற்றத்தில் தாக்கங்களை ஏற்படுத்தக்கூடும். ஐக்கிய அமெரிக்காவில் முக்கிய கொள்கை மாற்றங்கள் உலகளாவிய வர்த்தகம், முதலீடு, மூலதனப் பாய்ச்சல்கள், வளர்ச்சி மற்றும் பணவீக்கம் ஆகியவற்றில் தளம்பல்களிற்கு வழிவகுக்குமென்பதுடன் இவை இலங்கையின் வெளிநாட்டுத் துறைக்கு இன்றியமையாதனவாயுள்ளன.

மாறாக, படுகடன் மறுசீரமைப்புச் செயன்முறையின் வெற்றிகரமான நிறைவு மற்றும் நாட்டிற்கான தரமிடல் மேம்பாடு ஆகியவற்றின் தாக்கமானது அதிகரித்தளவிலான முதலீட்டாளர் மனோபாவங்களினூடாகவும் குறித்த சில படுகடன் கட்டுப்பாடுகளின் தளர்த்துகையினாலும் வளர்ச்சியினைத் தூண்டக்கூடும். அரசாங்கம் பல்வேறு வளர்ச்சிசார் கொள்கைகளை உறுதியளித்துள்ளதுடன் அவை இன்னும் வரவு செலவுத்திட்டத்தின் மூலம் முறைப்படுத்தப்படவில்லை. இக்கொள்கைகள் திட்டமிடப்பட்டவாறு வினைத்திறனாக நடைமுறைப்படுத்தப்படுமாயின், அவை தொடர்புடைய துறைகளுக்கு நேரடியாக ஆதரவளிக்கக்கக்கூடிய வேளையில், வியாபாரம் செய்யும் சூழல் மற்றும் ஆளுகைசார் சாத்தியமான முன்னேற்றங்கள் பொருளாதாரத்தின் வளர்ச்சி வாய்ப்புக்களை மேம்படுத்தத் துணைபுரியும். மேலும், சுற்றுலா மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளில் ஏதேனும் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க விரைவான முன்னேற்றங்கள் மேம்பட்ட பொருளாதார நடவடிக்கைகளிற்குப் பங்களிக்கக்கூடும். அதேவேளை, பாரியளவிலான மூலதன உட்கட்டமைப்பு அபிவிருத்திகளுடன் தொடர்புடைய செயற்பாட்டு

ரீதியிலான அதிகரிப்புக்களுடன் பொருளாதார நடவடிக்கைகளில் உத்வேகமொன்று பதிவுசெய்யப்பட்டு, உயர்ந்தளவிலான வளர்ச்சிக்கு வழிவகுக்கக்கூடும்.

ஒட்டுமொத்தமாக, அண்மைய கால மற்றும் நடுத்தர கால ஆகிய இரண்டிலுமான வளர்ச்சி எறிவுகளிற்கான இடர்நேர்வுகள் சமநிலையாகக் காணப்படுமென மதிப்பிடப்படுகின்றன. கீழ்நோக்கிய இடர்நேர்வுகளின் காரணமாக தோற்றம்பெறுகின்ற இடர்நேர்வுகள் மீது வளர்ச்சி எறிவுகள் மீதான மேல்நோக்கிய இடர்நேர்வுகளின் எதிரீட்டுத் தாக்கமொன்றின் சாத்தியத்தன்மையினால் இம்மதிப்பீடானது ஊக்குவிக்கப்படுகின்றது.

**வரைபடம் 05: எறிவுகளுக்கான இடர்நேர்வுகளின் சமநிலை**




மூலம்: மத்திய வங்கி அலுவலர் எறிவுகள்

## 2.4. முன்னைய எதிர்வுகூறல்களுடனான ஒப்பீடு[7]


### நடுத்தரகால எறிவுகளுக்குப் பயன்படுத்தப்படும் எடுகோள்கள்

2025 சனவரியில் நாணயக் கொள்கைச் சுற்றில் பயன்படுத்தப்பட்ட உலகளாவிய எறிவுகளின் அடிப்படையில், இலங்கையின் பிரதான வர்த்தகப் பங்காளர்களின் ஏற்றுமதி நிறையேற்றப்பட்ட வெளிநாட்டு வெளியீட்டு இடைவெளிக்கான தோற்றப்பாடு அண்மைய காலத்தில் மேம்பட்டுள்ள போதிலும், 2024 ஒகத்தில் நாணயக் கொள்கை அறிக்கையில் பயன்படுத்தப்பட்ட 2024 யூலையில் கிடைப்பனவாகவிருந்தவாறான தகவல்களுடன் ஒப்பிடுகையில் நடுத்தர காலத்தில் தேய்வடைந்தது.


[7] இந்தப் பிரிவு 2024 யூலையின் நாணயக் கொள்கை சுற்றில் பெறப்பட்ட 2024 ஒகத்தின் நாணயக் கொள்கை அறிக்கையில் வழங்கப்பட்ட எறிவுகளுடன் தற்போதைய எறிவுகளை ஒப்பிடுகிறது.

**வரைபடம் 06: உலகளாவிய எறிவுகள் (காலாண்டு ரீதியாக)**


**ஏற்றுமதி நிறையேற்றப்பட்ட வெளிநாட்டு வெளியீட்டு இடைவெளி (%)**





**ஐக்கிய அமெரிக்க பெடரல் நிதிய வீதம் (%, ஆண்டொன்றிற்கு)**




**உலக உணவுப் பணவீக்கம் (ஆண்டிற்காண்டு, %)**




**உலக எண்ணெய் விலை (பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ.டொலர்)**




2024 யூலை நாணயக் கொள்கைச் சுற்று (2024 ஒகத்து நா.கொ.அ)
2025 சனவரி நாணயக் கொள்கைச் சுற்று (2025 பெப்புருவரி நா.கொ.அ)

மூலங்கள்: காலாண்டு எறிவு மாதிரி, உலக எறிவு மாதிரி வலையமைப்பு (2024/06/26 மற்றும் 2025/01/21 அன்று இற்றைப்படுத்தப்பட்டது.)

ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய வலயம் மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகியவற்றின் பொருளாதாரங்களுடன் தொடர்புடைய திருத்தப்பட்ட எறிவுகள் இம்மாற்றத்திற்கு முதன்மைக் காரணமாயுள்ளன. 2025 சனவரி மாத நாணயக் கொள்கைச் சுற்றுக் காலப்பகுதியில்பயன்படுத்தப்பட்ட உலகளாவிய எறிவுகள் 2024 யூலையில் நாணயக் கொள்கைச் சுற்றுடன் ஒப்பிடுகையில் உணவுப் பணவீக்கத்தில் சடுதியான அதிகரிப்பொன்றினை

எதிர்வுகூறுகின்றது. உலக உணவுப் பணவீக்கமானது 2025இல் தொடர்ந்தும் உயர்வடைந்து அதன்பின்னர் நிலையாகவிருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. உலக எண்ணெய் விலைகளின் எறிவுப்பாதையானது 2024 யூலையில் எறிவுசெய்யப்பட்ட பாதையுடன் ஒப்பிடுகையில் கணிசமானளவு கீழ்நோக்கித் திருத்தப்பட்டது. அதேவேளை, ஐக்கிய அமெரிக்க பெடரல் றிசேர்வின் எச்சரிக்கையான அணுகுமுறைக்கு மத்தியில் ஐக்கிய அமெரிக்காவின் நாணயக் கொள்கைத் தளர்த்தலானது முன்னர் எறிவுசெய்யப்பட்டதிலும் பார்க்க மெதுவாகவிருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இறைப் பாதையானது 2024 யூலை நாணயக் கொள்கைச் சுற்றுடன் ஒப்பிடுகையில் முக்கியமாக 2024இற்கான தற்போதைய எறிவுகளில் திருத்தப்பட்டுள்ளது. 2024ஆம் ஆண்டிற்கான இறை மீதியானது முன்னைய எறிவுகளுடன் ஒப்பிடுகையில் 2024இற்கான எறிவுசெய்யப்பட்ட வலுவான பொருளாதார வளர்ச்சிக்கு மத்தியில் அரசிறையில் ஏற்பட்ட அதிகரிப்புக்களினால் முக்கியமாகத் தூண்டப்பட்டு மேம்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. சென்மதி நிலுவைகளின் நடைமுறைக் கணக்கு நிலுவை மீதான ஊகங்கள் புதிய தகவல்களினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் திருத்தப்பட்டுள்ளன. இதற்கமைய, 2024இற்கான நடைமுறைக் கணக்கு மிகையானது முதன்மையாக 2024இல் இறக்குமதிகளில் ஏற்பட்ட எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க தாழ்ந்தளவிலான அதிகரிப்பின் காரணமாக 2024 யூலையில் ஊகிக்கப்பட்ட மட்டத்திலும் பார்க்க உயர்வானதாகத் தற்போது எறிவுசெய்யப்படுகின்றது.

**பணவீக்கப் பாதை**

2024 ஓகத்து நாணயக் கொள்கை அறிக்கையில் வெளியிடப்பட்ட எறிவுகளுடன் ஒப்பிடுகையில், அடையப்பட்ட ஆண்டிற்கு ஆண்டு முதன்மைப் பணவீக்கமானது 2024இன் மூன்றாம் மற்றும் 2024இன் நான்காம் ஆகிய இரு காலாண்டுகளிலும் எறிவுசெய்யப்பட்ட மட்டங்களுக்கு கீழாக காணப்பட்டதுடன் இது உள்நாட்டு எரிபொருள் விலைகளின் குறைவடைந்த மட்டங்கள் மற்றும் நீர் தீர்வைகளின் குறைவு என்பவற்றுடன் இணைந்து முன்னர் ஊகிக்கப்பட்ட பாதையுடன் ஒப்பிடுகையில் அடையப்பட்ட மின்சார தீர்வைச் சீர்திருத்தங்களின் விலகலினால் பங்களிக்கப்பட்டது. எதிர்கால மின்சாரத் தீர்வைச் சீர்திருத்தங்கள் பற்றிய வரையறுக்கப்பட்ட தகவல்களிற்கு மத்தியில், 2024 யூலை மாத எறிவுகளின் போது மின்சாரத் தீர்வைகளில் சிறியளவிலானதோர் அதிகரிப்பு 2024இன் நான்காம் காலாண்டில் நடைமுறைப்படுத்தப்படுமென ஊகிக்கப்பட்டது. இருப்பினும், அத்தகைய தீர்வை அதிகரிப்புக்கள் பொருண்மியப்படுத்தப்படவில்லையென்பதுடன் 2025 சனவரியில் கணிசமானளவு கீழ்நோக்கிய தீர்வைத் திருத்தமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. 2024இன் மூன்றாம் காலாண்டிற்கான அடையப்பட்ட ஆண்டிற்கு ஆண்டு முதன்மைப் பணவீக்கமானது கீழ்நோக்கிய நீர்த் தீர்வைத் திருத்தத்தினால் முக்கியமாகப் பங்களிக்கப்பட்டு முன்னைய எறிவிலும் பார்க்க சிறிதளவு தாழ்வாகக் காணப்பட்டது. 2024இன் நான்காவது காலாண்டில், அடையப்படாத எதிர்பார்க்கப்பட்ட மின்சாரத் தீர்வை அதிகரிப்பு மற்றும் எரிபொருள் விலைகளிற்கான படிப்படியான கீழ்நோக்கிய திருத்தங்கள் ஆகியன அடையப்பட்ட பணவீக்கமானது அதன் முன்னர் எறிவுசெய்யப்பட்ட பாதையிலிருந்து விலகலடைவதற்குப் பங்களித்தன. மேலும், 2024இல் இலங்கை ரூபாவானது ஐக்கிய அமெரிக்க டொலரிற்கெதிராக வலுவடைவதன் ஊடுகடத்தலானது இவ்விலகலிற்கு பங்களித்திருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. 2024இன் முதலாவது காலாண்டில் பெறுமதி கூட்டப்பட்ட வரித் தாக்கத்திலிருந்து தோற்றம்பெற்ற புள்ளிவிபரத் தளத்தாக்கத்தின் காரணமாக 2025இன் முற்பகுதியில் பணவீக்கத்தில் முன்னர் எதிர்பார்க்கப்பட்ட வீழ்ச்சியானது தற்போதைய எறிவுகளிலும் காணப்படுகின்றது. 2024 யூலையில் மேற்கொள்ளப்பட்ட எறிவினைப் போலவே, தொடர்ச்சியான வலு விலைக் குறைப்புக்களின் காரணமாக ஏற்பட்டுள்ள சாதகமற்ற தளத்


தாக்கமானது 2025இன் பிற்பகுதியில் ஆண்டிற்கு ஆண்டு முதன்மைப் பணவீக்கத்தினை மேல்நோக்கி உந்தச்செய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இருப்பினும், தற்போதைய எறிவுகளில், எதிர்பார்க்கப்பட்ட பணவீக்கப் பாதையின் உச்சநிலையானது தாழ்ந்த அளவொன்றுடன் முன்னோக்கி நகர்ந்துள்ளதுடன் இது எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க குறைந்தளவில் அடையப்பட்ட பணவீக்கம் மற்றும் மிக அண்மைய மின்சாரத் தீர்வைத் திருத்தங்களின் காரணமாக அண்மைய கால எறிவுகளிற்கான கீழ்நோக்கிய திருத்தங்கள் என்பவற்றினால் பங்களிக்கப்பட்டுள்ளது. அதே போலே, முன்னைய எறிவுகளினைப் போலவே, பணவீக்கமும் நடுத்தர காலத்தில் பணவீக்க இலக்கினை அண்மித்துப் படிப்படியாக உறுதிநிலைப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

# 3. தற்போதைய பொருளாதார அபிவிருத்திகள்

### 3.1. பணவீக்கம்

***முதன்மைப் பணவீக்கமானது 2024இன் இரண்டாம் அரையாண்டுப் பகுதியில் வீழ்ச்சியடைந்து செல்கின்ற போக்கொன்றினைப் பதிவுசெய்ததுடன் நிர்வாகரீதியிலான விலைகளில் மேற்கொள்ளப்பட்ட குறைப்புக்களின் முக்கிய காரணமாக 2024 செத்தெம்பர் தொடக்கம் எதிர்மறையான வீச்சொன்றில் அது தொடர்ந்தும் காணப்பட்டது.***

**வரைபடம் 07: முதன்மை மற்றும் மையப் பணவீக்கத்தின் அசைவுகள் (கொ.நு.வி.சுட்டெண், 2021=100)**





மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (2021=100)இன் அடிப்படையிலமைந்த முதன்மைப் பணவீக்கமானது (ஆண்டிற்கு ஆண்டு) 2024 யூலையில் பதிவுசெய்யப்பட்ட 2.4 சதவீதத்திலிருந்து வீழ்ச்சியடைந்து செல்கின்ற போக்கொன்றினைப் பின்தொடர்ந்தது. இது 2024 செத்தெம்பரிலிருந்து எதிர்மறையான வீச்சீல் தொடர்ந்து காணப்பட்டது. இப்பணச்சுருக்கப் போக்கானது உணவல்லாத வகையில் ஏற்பட்ட விலைக் குறைப்புக்களினால் முக்கியமாக உந்தப்பட்டதுடன், இதற்கு 2024 யூலையில் மின்சாரத் தீர்வைகளில் மேற்கொள்ளப்பட்ட கீழ்நோக்கிய திருத்தங்களிலிருந்து முக்கிய பங்களிப்பளிக்கப்பட்டது. மேலும், உள்நாட்டு எரிபொருள் மற்றும் திரவப் பெற்றோலிய எரிவாயு விலைகளில் அடிக்கடி மேற்கொள்ளப்பட்ட கீழ்நோக்கிய திருத்தங்கள் மற்றும் 2024 ஓகத்தில் நீர் தீர்வை மற்றும் 2024 யூலை மற்றும் ஓகத்து மாதங்களில் பேரூந்துக் கட்டணங்கள் என்பவற்றில் மேற்கொள்ளப்பட்ட கீழ்நோக்கிய திருத்தங்கள் மற்றும் உணவு விலைகளின் மிதமடைதல் என்பனவும் வீழ்ச்சிக்குப் பங்களித்தன. இதற்கமைய, கொ.நு.வி.சுட்டெண்ணின் அடிப்படையிலமைந்த முதன்மைப் பணவீக்கமானது 2024 திசெம்பரளவில் -1.7 சதவீதமாகப் (ஆண்டிற்கு ஆண்டு)

பதிவுசெய்யப்பட்டது.[8] கொ.நு.வி.சுட்டெண்ணின் அடிப்படையிலமைந்த உணவுப் பணவீக்கமானது 0.8 சதவீதமாக (ஆண்டிற்கு ஆண்டு) நேர்மறையாகத் தொடர்ந்தும் காணப்பட்ட வேளையில், உணவல்லாப் பணவீக்கம் 2024 திசெம்பரில் -3.0 சதவீதமாக (ஆண்டிற்கு ஆண்டு) எதிர்மறையாகத் தொடர்ந்தும் காணப்பட்டது. அதேவேளை, தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அடிப்படையிலமைந்த (2021=100) முதன்மைப் பணவீக்கமும் (ஆண்டிற்கு ஆண்டு) 2024 யூலையில் பதிவுசெய்யப்பட்ட 2.5 சதவீதத்திலிருந்து 2024 திசெம்பரில் பதிவுசெய்யப்பட்ட -2.0 சதவீதத்திற்குக் குறைவடைந்தது.

**வரைபடம் 08: ஆண்டிற்காண்டு முதன்மைப் பணவீக்கத்திற்கான பங்களிப்பு (கொ.நு.வி.சுட்டெண்)**




மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
மத்திய வங்கி அலுவலர் கணிப்புக்கள்


மாதாந்த அடிப்படையொன்றில், மின்சாரத் தீர்வைகள், எரிபொருள் விலைகள் மற்றும் போக்குவரத்துச் செலவுகள் மற்றும் தளர்வடைகின்ற உணவு விலைகள் என்பவற்றில் ஏற்பட்ட குறைப்புக்களின் காரணமாக 2024இன் பல்வேறு மாதங்களில் கொ.நு.வி.சுட்டெண்ணின் அடிப்படையிலமைந்த முதன்மைப் பணவீக்கமானது அநேகமாக எதிர்மறையாகத் தொடர்ந்தும் காணப்பட்டது.

பொருளாதாரத்தின் அடிப்படை பணவீக்கப் போக்குகளை பிரதிபலிக்கின்ற கொ.நு.வி.சுட்டெண்ணின் அடிப்படையிலமைந்த மையப் பணவீக்கமானது (ஆண்டிற்கு ஆண்டு) 2024இன் இரண்டாம் அரையாண்டுப் பகுதியில் தொடர்ந்தும் மிதமடைந்து காணப்பட்டதுடன் 2024 திசெம்பரில் 2.7

[8] 2025 சனவரியில், கொ.நு.வி.சுட்டெண்ணின் அடிப்படையிலமைந்த முதன்மைப் பணவீக்கமானது -4.0 சதவீதமாகப் (ஆண்டிற்கு ஆண்டு) பதிவுசெய்யப்பட்டது.

சதவீதமாகப் பதிவுசெய்யப்பட்டது.[9] அதேவேளை, தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அடிப்படையிலமைந்த மையப் பணவீக்கமானது (ஆண்டிற்கு ஆண்டு) 2024 திசெம்பரில் 1.3 சதவீதமாகப் பதிவுசெய்யப்பட்டது.

**வரைபடம் 09: மாதாந்த முதன்மைப் பணவீக்கத்திற்கான பங்களிப்பு (கொ.நு.வி.சுட்டெண்)**




மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
மத்திய வங்கி அலுவலர் கணிப்புக்கள்

கொ.நு.வி.சுட்டெண்ணின் அடிப்படையிலமைந்த காலாண்டு முதன்மைப் பணவீக்கமானது 2024இன் இரண்டாம் காலாண்டு மற்றும் 2024இன் மூன்றாம் காலாண்டு என்பவற்றில் தொடர்ச்சியான இரண்டு காலாண்டுகளிற்கு நாணயக் கொள்கைக் கட்டமைப்புசார் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட ±2 சதவீத புள்ளிகளைக் கொண்ட இடைவெளியொன்றிற்கு மேலாகக் கீழ்ப் பக்கத்திலிருந்து பணவீக்க இலக்கிலிருந்து விலகலடைந்து காணப்பட்டமையினால் இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் பிரிவு 26(5)இன் கீழ் தேவைப்படுத்தப்பட்ட அறிக்கையினை மாண்புமிகு நிதியமைச்சரினூடாகப் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து, அறிக்கையின் உள்ளடக்கங்கள் அரசாங்க நிதி பற்றிய குழுவில் விரிவாகக் கலந்தாலோசிக்கப்பட்டதுடன் அறிக்கை பொதுமக்களுக்குக் கிடைப்பனவாகக் காணப்பட்டது.[10] காலாண்டு முதன்மைப் பணவீக்கமானது 2024இன் நான்காம் காலாண்டிலும் 2 சதவீத புள்ளிகளிற்கும் பார்க்க கூடுதலாகப் பணவீக்க இலக்கிற்குக் கீழாகத் தொடர்ந்தும் காணப்பட்டமையினால் இலங்கை

[9] 2025 சனவரியில், கொ.நு.வி.சுட்டெண்ணின் அடிப்படையிலமைந்த மையப் பணவீக்கமானது 1.2 சதவீதமாகப் (ஆண்டிற்கு ஆண்டு) பதிவுசெய்யப்பட்டது.

[10] பணவீக்க இலக்கிலிருந்தான அதன் விலகல் - 2024இன் இரண்டாம் காலாண்டு மற்றும் மூன்றாம் காலாண்டு குறித்த அறிக்கையினை மத்திய வங்கியின் இணையத்தளத்தின் வாயிலாகப் பெற்றுக்கொள்ள முடியும்.


மத்திய வங்கிச் சட்டத்தின் பிரிவு 26(5)இன் கீழான பின்தொடர்தல் அறிக்கையும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

***தற்போது கிடைப்பனவாகவுள்ள தகவல்களின் பிரகாரம்,[11] முறைசாரா தனியார் துறைக் கூலி வீதச் சுட்டெண் (2018=100) மற்றும் பொதுத் துறைக் கூலி வீதச் சுட்டெண் (2016=100) ஆகிய இரண்டும் 2024 காலப்பகுதியில் அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன.***

2023இல் பதிவுசெய்யப்பட்ட பெயரளவு கூலிகளின் மேல்நோக்கிய போக்கினைத் தொடர்ந்து, முறைசாரா தனியார் துறைக் கூலி வீதச் சுட்டெண் 2024இல் ஒட்டுமொத்த அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது. பணிகள் நடவடிக்கைகள் மிகவும் உயர்ந்தளவிலான கூலி வளர்ச்சியினைப் பதிவுசெய்ததுடன் இவ்வதிகரிப்பானது மூன்று முக்கிய பொருளாதார நடவடிக்கைகளிலும் காணப்பட்டது, இருப்பினும், தளர்வடைகின்ற பணவீக்க அழுத்தத்துடன் இசைந்து செல்லும் விதத்தில் பெயரளவு முறைசாரா தனியார் துறைக் கூலி வீதச் சுட்டெண்ணின் ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியானது 2023 உடன் ஒப்பிடுகையில் 2024 காலப்பகுதியில் மெதுவடைந்தது. மேலும், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையொன்றில், உண்மை முறைசாரா தனியார் துறைக் கூலி வீதச் சுட்டெண்ணானது பணவீக்கத்தில் ஏற்பட்ட தொடர்ச்சியான மெதுவடைதலுடன் 2024 காலப்பகுதியில் தொடர்ந்து துரிதமடைந்தது.

2024 சனவரி மற்றும் ஏப்பிறல் மாதங்களில் பொதுத் துறை ஊழியர்களிற்கான வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவில் மேற்கொள்ளப்பட்ட அதிகரிப்புடன் 2024 காலப்பகுதியில் பொதுத் துறைக் கூலி வீதச் சுட்டெண்ணானது அதிகரித்தது. அதேவேளை, பணவீக்கத்தில் ஏற்பட்ட மெதுவடைதலின் காரணமாக உண்மைக் கூலி வீழ்ச்சி கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

**வரைபடம் 10: முறைசாரா தனியார் துறை கூலி வீதச் சுட்டெண் (2018=100) மற்றும் பொதுத்துறை கூலி வீதச் சுட்டெண்ணின் (2016=100) அசைவுகள்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி


[11] இப்பிரிவிலுள்ள தகவல்கள் முதன்மையாக மத்திய வங்கியின் மூலம் தொகுக்கப்பட்ட பொதுத் துறைக் கூலி வீதச் சுட்டெண் (2016=100) மற்றும் முறைசாரா தனியார் துறைக் கூலி வீதச் சுட்டெண் (2018=100) என்பவற்றின் அடிப்படையிலமைந்துள்ளன.

## சிறப்புக்குறிப்பு ஆ: இலங்கையின் பணச்சுருக்கத்தினை ஏற்படுத்திய விலைப் போக்குகள் மற்றும் பொதுமக்களின் கருத்துக்கள்

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை (கொ.நு.வி.சுட்டெண்) அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு) எதிர்மறையான வீச்சில் தொடர்ந்தும் காணப்படுகின்றதுடன் 2025 சனவரியில் தொடர்ச்சியாக ஐந்தாவது மாதமாக இலங்கை பணச்சுருக்கத்தினை எதிர்கொண்டது. நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினால் அளவிடப்பட்டவாறு ஓராண்டிற்கு முன்னரான அதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் பொருளாதாரமொன்றின் ஒட்டுமொத்த விலை மட்டத்தில் ஏற்படும் வீழ்ச்சியொன்றினால் பணச்சுருக்கமானது அடையாளப்படுத்தப்படுகின்றது. ஒட்டுமொத்த விலை மட்டமானது பொதுவான குடியிருப்பொன்றினால் நுகரப்படும் பொருட்கள் மற்றும் பணிகளின் விலைகளின் நிறையேற்றப்பட்ட சராசரியொன்றினை அவற்றின் நுகர்வுப் பங்குகளின் அடிப்படையில் பிரதிபலிக்கின்றது. இருப்பினும், ஒட்டுமொத்த விலை மட்டத்தில் ஏற்படும் வீழ்ச்சியொன்று நுகரப்படும் அனைத்துப் பொருட்கள் மற்றும் பணிகளின் விலைகளில் குறைவொன்றினைக் குறித்துக்காட்டுவதில்லை. பொதுவாக, பொருட்கள் மற்றும் பணிகள் குறிப்பிட்டதொரு காலப்பகுதியில் பல்வேறு விலை அசைவுகளை வெளிப்படுத்தக்கூடும். சில விலைகள் அதிகரித்து, ஏனையவை மாற்றமின்றித் தொடர்ந்தும் காணப்படக்கூடிய வேளையில், சில விலைகள் வீழ்ச்சியடைக்கூடும். விலை வீழ்ச்சிகளின் ஒட்டுமொத்தத் தாக்கமானது குறிப்பிட்டதொரு காலப்பகுதியில் உயர்வடைகின்ற விலைத் தாக்கத்தினை விட விஞ்சிக் காணப்படுகின்ற போது பணச்சுருக்கம் ஏற்படுவதுடன், இதன்விளைவாக ஒட்டுமொத்த விலை மட்டத்தில் குறைவொன்று தோற்றுவிக்கப்படுகின்றது.

2025 சனவரியில், கொ.நு.வி.சுட்டெண்ணின் அடிப்படையிலமைந்த முதன்மைப் பணவீக்கமானது (ஆண்டிற்கு ஆண்டு) -4.0 சதவீதமாக (அல்லது 4.0 சதவீத பணச்சுருக்கமாக) பதிவுசெய்யப்பட்டது. கொ.நு.வி.சுட்டெண்ணினால் அளவிடப்பட்டவாறு ஒட்டுமொத்த விலை மட்டமானது பரிசீலனையிற்கொள்ளப்பட்ட காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்துள்ளது என்பதனை இது குறித்துக்காட்டுகின்றது. இருப்பினும், மேலே குறிப்பிடப்பட்டவாறு, அனைத்து விலைகளும் வீழ்ச்சியடைந்திருக்கவில்லை. ஒட்டுமொத்த விலை மட்டமானது வீழ்ச்சியடைந்துள்ள போதிலும் குறித்த சில பொருட்கள் மற்றும் பணிகள் விலை அதிகரிப்புக்களைக் கொண்டிருந்துள்ளன. குறித்த சில வகைப் பொருட்களின் விலை வீழ்ச்சிகளின் ஒட்டுமொத்தத் தாக்கமானது கடந்த ஆண்டில் ஏனையவற்றின் உயர்வடைகின்ற விலைத் தாக்கத்தினை விஞ்சிக் காணப்பட்டுள்ளதென்பதனை கொ.நு.வி.சுட்டெண்ணின் வீழ்ச்சி பிரதிபலிக்கின்றது.

**வரைபடம் ஆ.1: வகைப்பாட்டு ரீதியிலான ஆண்டிற்கு ஆண்டு முதன்மைப் பணவீக்கம் –2025 சனவரி (கொ.நு.வி.சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்டது, %)**




குறிப்பு: அடைப்புக் குறியினுள் அடிப்படை நிறைகள் தரப்பட்டுள்ளன.

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்


2025 சனவரியில் கொ.நு.வி.சுட்டெண்ணின் முக்கிய வகைகளில் ஆண்டிற்கு ஆண்டு விலை மாற்றங்களை வரைபடம் ஆ.1 எடுத்துக்காட்டுகின்றது. உணவு மற்றும் வெறியமல்லாக் குடிவகைகள்;[§]

உணவகங்கள் மற்றும் விடுதிகள்; வீடமைப்பு, நீர், மின்சாரம், எரிவாயு மற்றும் ஏனைய எரிபொருட்கள்; மற்றும் போக்குவரத்து வகைகள் தேறிய அடிப்படையொன்றில் விலை

---

§ தொடர்புடைய காலப்பகுதியில் குறித்த சில உணவுப் பொருட்களின் விலைகள் வீழ்ச்சியடைந்துள்ள வேளையில், வேறு சில உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. உணவு வகையின் கீழ் மொத்தச் செலவினத்தில் ஏற்பட்ட குறைவானது ஒட்டுமொத்தத் தாக்கமாகும்.

**வரைபடம் ஆ.2: சனவரி தொடக்கம் 2025 சனவரி வரையிலான வீட்டுத்துறை செலவினங்களின் வீழ்ச்சிக்கான பங்களிப்பு (கொ.நு.வி.சு அடிப்படையாகக் கொண்டது, ரூ)**




மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

* 2024 சனவரியுடன் ஒப்பிடுகையில், வழக்கமான வீட்டுத்துறை செலவினம் ரூ.7,490 ஆல் குறைக்கப்பட்டுள்ளது என்பதைக் குறிக்கின்றது. இது 2025 சனவரியில் -4.0 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு பணவீக்கத்துடன் தொடர்புபடுகின்றது.

குறிப்பு: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டவாறு வீட்டுத்துறை செலவினங்களின் ஆண்டிற்கு ஆண்டு மாற்றம் **www.statistics.gov.lk/InflationAndPrices/StaticalInformation/MonthlyCCPI/CCPI_20250131E** என்ற இணையத்தளத்தில் கிடைக்கப்பெறுகின்றது.

2024 சனசரி தொடக்கம் 2025 சனவரி வரையான காலப்பகுதியில் மொத்த குடியிருப்புச் செலவு குறைந்தமைக்குப் பல்வேறு வகைகளிலிருந்தான பங்களிப்பினை வரைபடம் ஆ. 2 விளக்குகின்றது. வீடமைப்பு, நீர், மின்சாரம், எரிவாயு மற்றும் ஏனைய எரிபொருட்கள்; உணவு மற்றும் வெறியமல்லாக் குடிவகைகள்; மற்றும் போக்குவரத்து வகைகள் போன்றவை குடியிருப்புச் செலவினத்தினைக் குறைப்பதில் மிகப்பெரும் பங்களிப்பாளர்களாகக் காணப்படுகின்றன என்பதனையும் இது ஏனைய வகைகளின் செலவின அதிகரிப்புக்களை விஞ்சிக் காணப்பட்டு, அதன்மூலம் முன்னைய ஆண்டின் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் மொத்த குடியிருப்புச் செலவிடலில் குறைவொன்றினைத் தோற்றுவிக்கின்றது என்பதனையும் வரைபடம் காட்டுகின்றது. பல்வேறு விலை அசைவுகளிற்கு

மத்தியில் கொ.நு.வி.சுட்டெண்ணின் குறித்த சில வகைகளின் குடியிருப்புச் செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி பற்றிய மேலதிக விவரங்களை வழங்கும் பொருட்டு, உணவு மற்றும் வெறியமல்லாக் குடிவகைகள்; வீடமைப்பு, நீர், மின்சாரம், எரிவாயு மற்றும் ஏனைய எரிபொருட்கள்; மற்றும் போக்குவரத்து வகைகள் என்பவற்றில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில பொருட்களின் ஆண்டிற்கு ஆண்டு விலை குறைப்புக்களை அட்டவணை ஆ.1 வழங்குகின்றது.


**அட்டவணை ஆ.1: 2024 சனவரி தொடக்கம் 2025 சனவரி வரையிலான பொருட்களின் தெரிவுசெய்யப்பட்ட வகைகள் மீதான மாதாந்த வீட்டுத்துறை செலவினங்களின் மாற்றம் (கொ.நு.வி.சு அடிப்படையாகக் கொண்டது, ரூ)**

| வகைகள்/பண்டங்கள் | மாற்றம் (ரூ.) | பணவீக்கத்திற்கான பங்களிப்பு(%) | |
|---|---|---|---|
| **வீடமைத்தல்,நீர்,மின்சாரம்,எரிவாயு மற்றும் ஏனைய எரிபொருட்கள்** | **-6,794.18** | **-3.68** | |
| இதில் வீட்டு வாடகை | 145.93 | 0.08 | + |
| நீர் பட்டியல் | -240.98 | -0.13 | |
| மின் பட்டியல் | -6,432.42 | -3.49 | - |
| திரவப் பெற்றோலிய எரிவாயு | -271.07 | -0.15 | |
| **உணவு மற்றும் வெறியமல்லாக் குடிவகைகள்** | **-1,544.77** | **-0.83** | |
| இதில் அரிசி | 666.66 | 0.36 | |
| தேங்காய் | 1,537.81 | 0.83 | + |
| தேங்காய் எண்ணெய் | 297.65 | 0.16 | |
| பாண் (சாதாரணம்) | -137.44 | -0.07 | |
| கோழி இறைச்சி | -292.76 | -0.16 | |
| பதப்படுத்தப்பட்ட மீன் | -349.53 | -0.19 | |
| உடன் பழங்கள் | -376.99 | -0.20 | |
| காய்கறிகள் | -1,450.60 | -0.79 | - |
| பெரிய வெங்காயம் | -788.10 | -0.43 | |
| சீனி | -178.08 | -0.10 | |
| மிளகாய் தூள் | -139.71 | -0.08 | |
| உலர்ந்த மிளகாய் | -180.26 | -0.10 | |
| **போக்குவரத்து** | **-925.97** | **-0.50** | |
| இதில் வாகனப் பராமரிப்பு செலவினங்கள் | 201.39 | 0.11 | + |
| பெற்றோல் | -1,210.61 | -0.66 | |
| டீசல் | -200.51 | -0.11 | - |
| பேருந்துக் கட்டணம் | -187.93 | -0.10 | |

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

குறிப்பு: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டவாறு வீட்டுத்துறை செலவினங்களின் ஆண்டிற்கு ஆண்டு மாற்றம் **www.statistics.gov.lk/InflationAndPrices/StaticalInformation/MonthlyCCPI/CCPI_20250131E** என்ற இணையத்தளத்தில் கிடைக்கப்பெறுகின்றது.

**வரைபடம் ஆ.3: கொ.நு.வி.சு மற்றும் பணவீக்கத்தின் அசைவுகள்**





மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

கடந்த சில மாதங்களாகப் பணச்சுருக்கமானது காணப்பட்டுவருகின்ற போதிலும், வாழ்க்கைச் செலவிற்கு நிவாரணமொன்றாக அது பிரதிபலிக்கப்படுவதில்லை என பொதுமக்களில் சில பிரிவினர் கோருகின்றனர். ஏற்கனவே உயர்ந்த நிலையில் காணப்படும் விலை மட்டங்கள் இதற்குச் சாத்தியமான காரணமொன்றாக அமையக்கூடும். ஒட்டுமொத்த விலை மட்டத்தின் அதிகரிப்பின் வேகமானது குறைவடைந்து ஓரிரு மாதங்களுக்கு எதிர்மறையாகத் திரும்பலடைந்துள்ள போதிலும், வரைபடம் சி.கு.3இல் காட்டப்பட்டுள்ளவாறு, 2022இற்கு முன்னைய அதன் மட்டங்களுடன் ஒப்பிடுகையில் அது தொடர்ந்தும் குறிப்பிடத்தக்களவு உயர்வடைந்து காணப்படுகின்றது. கொ.நு.வி.சுட்டெண்ணானது பொதுவான குடியிருப்பொன்றின் மொத்த மாதாந்த செலவுகளைப் பிரதிபலிக்கின்றது. ஆதலால், கொ.நு.வி.சுட்டெண்ணானது உயர்ந்தளவிலான மட்டங்களில் காணப்படுகின்றதென்பது மாதாந்த குடியிருப்புச் செலவினம் சராசரியாக இன்னமும் உயர்வடைந்து காணப்படுகின்றதென்பதனைக் குறித்துக்காட்டுகின்றது. மேலும், கடந்த கால பணவீக்க நிகழ்வுகளின் தாக்கத்தினை எதிரீடுசெய்வதற்குக் குடித்தொகையின் பல பிரிவுகளின் வருமான மட்டங்கள் முழுமையாகச் சீராக்கப்பட்டிருப்பதற்கான சாத்தியமில்லை. கூலி வீதச் சுட்டெண்களின் அதிகரிப்பிற்கு எதிராக கொ.நு.வி.சுட்டெண்ணின் அதிகரிப்பினை ஒப்பிடுகின்ற வரைபடம் ஆ.4இல் இது தெளிவாகப் புலப்படுகின்றது. ஆதலால், கடந்த சில ஆண்டுகளில் குடியிருப்புக்களின் உண்மையான வருமான மட்டங்கள் படிப்படியாக வீழ்கின்ற சூழலொன்றில், அண்மைய மாதங்களில் மொத்த மாதாந்த செலவுகளில் அவதானிக்கப்பட்ட மிதமான குறைவானது குடியிருப்புக்களிற்குக் குறிப்பிடத்தக்க நிவாரணங்களை வழங்காமலிருக்கலாம்.

மேலும், உண்மையில் பதிவுசெய்யப்பட்ட பணவீக்கமானது உணரப்பட்ட பணவீக்கத்திலிருந்து வேறுபடுவதற்கு உளவியல் மற்றும் நடத்தைசார் அம்சங்கள் காரணமாயமையக்கூடும். அடிக்கடி கொள்வனவுசெய்யப்படாத பொருட்களின் விலைகளில் ஏற்படும் மாற்றங்களை விட அடிக்கடி கொள்வனவுசெய்யப்பட்ட பொருட்களின் விலை மாற்றங்கள், செலவினப் பங்கினைப் பொருட்படுத்தாமல், உணரப்பட்ட பணவீக்கத்தினைப் பாதிக்கின்றன என ஆராய்ச்சி எடுத்துக்காட்டுகின்றது (உதாரணம்: D'Acunto et al. (2021) மற்றும் Georganas et al. (2014)). இலங்கையில், மின்சாரத் தீர்வைகளில் குறிப்பிடத்தக்க குறைவொன்று காணப்படுகின்ற போதிலும், மின்சாரக் கட்டணம் மாதத்திற்கு ஒரு முறையே செலுத்தப்படுகின்றது. மறுபுறம், அரிசி மற்றும் தேங்காய் என்பவற்றின் விலைகள் அதிகரித்துள்ளதுடன் அப்பொருட்கள் மாதத்திற்குப் பல தடவைகள் அடிக்கடி கொள்வனவு செய்யப்படுகின்றன. எனவே, அதிகரித்தளவிலான அரிசி மற்றும் தேங்காய் விலைகளின் காரணமாக செலவுகளில் ஏற்படும் அதிகரிப்பிலும் பார்க்க மின்சாரத் தீர்வைக் குறைப்பின் சேமிப்பானது பெருமளவில் காணப்படுகின்ற போதிலும், இதில் முன்குறிப்பிடப்பட்ட செலவுகளின் அதிகரிப்பானது உணரப்பட்ட பணவீக்கத்தில் பாரியளவிலான தாக்கமொன்றினைக் கொண்டிருக்கக்கூடும். மேலும், பணவீக்க எண்ணக்கரு பற்றிய விழிப்புணர்வின்மையும் மேற்கூறப்பட்ட வேறுபாட்டிற்குப் பங்களிக்கக்கூடும்.

**வரைபடம் ஆ.4: கொ.நு.வி.சு அசைவுகள் மற்றும் கூலி வீதச் சுட்டெண்கள்
(சனவரி 2022இல் 100ற்கு இயல்பாக்கப்பட்டது)**




மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

2022 மற்றும் 2023 ஆகிய ஆண்டுகளில் இலங்கை எதிர்கொண்ட விதிவிலக்கான உயர்ந்தளவிலான பணவீக்க மட்டங்களைக் கருத்திற்கொண்டு, பணச்சுருக்கத்தின் குறுகியதொரு காலப்பகுதியானது வாழ்க்கைச் செலவில் ஏற்பட்ட பாரிய அதிகரிப்பிலிருந்து இன்னமும் மீட்சியடைந்து வருகின்ற குடியிருப்புக்களுக்குச் சில நிவாரணங்களை வழங்கக்கூடும். இருப்பினும், இத்தகைய நிகழ்வுகள் பெரும்பாலும் பொருளாதார ஸ்தம்பிதநிலை மற்றும் அதிகரித்துச்செல்கின்ற தொழிலின்மை என்பவற்றுடன் இணைந்து காணப்படுகின்றமையினால் நீடித்த பணச்சுருக்கமானது விரும்பத்தகாததொன்றாகும். இலங்கையை பொறுத்த வரையில், நீடித்துநிலைத்திருக்கின்ற பணச்சுருக்கமானது சாத்தியமற்றதொன்றாகக் காணப்படுகின்றதுடன் பணவீக்கமானது நடுத்தர காலத்தில் இலக்கினை நோக்கிப் படிப்படியாக ஒருங்கிணையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

***உசாத்துணைகள்:***

1. D’Acunto, F., Malmendier, U., Ospina, J., & Weber, M. (2021). Exposure to grocery prices and inflation expectations. *Journal of Political Economy*, 129(5), 1615-1639.
2. Georganas, S., Healy, P. J., & Li, N. (2014). Frequency bias in consumers' perceptions of inflation: An experimental study. *European Economic Review*, 67, 144-158.

### 3.2. உண்மைத் துறை

***தொடர்ச்சியாக வலுவான மீட்பினைப் பிரதிபலித்து, இலங்கை பொருளாதாரமானது 2024ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் விரிவடைந்ததுடன் 2024ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் சாதகமான வளர்ச்சி உத்வேகத்தைக் காண்பித்தது.***

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளிற்மைவாக, இலங்கை பொருளாதாரமானது அனைத்து மூன்று முக்கியத் துறைகளிலிருந்தான சாதகமான

பங்களிப்புக்களுடன், 2024ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 5.5 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) வளர்ச்சியடைந்தது.

இக்காலப்பகுதியில், கால்நடை உற்பத்தி, தேயிலை மற்றும் பழங்களின் வளர்ப்பு என்பனவற்றினால் பாரியளவில் உந்தப்பட்டு வேளாண்மை நடவடிக்கைகள் விரிவாக்கமொன்றைப் பதிவுசெய்தன. கைத்தொழில் நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்கு கட்டடவாக்கம், தயாரிப்பு, மற்றும் சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகள் வழிவகுத்தன. அதேவேளை, தங்குமிடவசதி, போக்குவரத்து, தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சிப்படுத்தல், மற்றும் நிதியியல் பணி நடவடிக்கைகள் போன்றவற்றின் சாதகமான வளர்ச்சியின் மூலம் பணிகள் நடவடிக்கைகளின் விரிவாக்கத்திற்கு பெரிதும் ஆதரவளிக்கப்பட்டது.

**அட்டவணை 01: உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கான மதிப்பீடுகள் (ஆண்டிற்கு ஆண்டு, %) (தற்காலிகமானது)**

| பொருளாதார நடவடிக்கை | 2023 | | | | | 2024 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கா1 | கா2 | கா3 | கா4 | ஆண்டிற்கான | கா1 | கா2 | கா3 | 9 மாதங்கள் |
| வேளாண்மை | 1.6 | 4.2 | 4.2 | 0.6 | 2.6 | 1.1 | 1.7 | 3.0 | 1.9 |
| கைத்தொழில் | -24.3 | -11.7 | -0.7 | 7.9 | -9.2 | 11.8 | 10.9 | 10.8 | 11.2 |
| பணிகள் | -4.6 | -0.5 | 1.7 | 2.8 | -0.2 | 2.6 | 2.5 | 2.6 | 2.6 |
| **மொத்த உள்நாட்டு உற்பத்தி** | **-10.7** | **-3.0** | **1.6** | **4.5** | **-2.3** | **5.3** | **4.7** | **5.5** | **5.2** |

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்


கைத்தொழில் மற்றும் பணிகள் நடவடிக்கைகள் 2024ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டில் பொருளாதாரத்தின் சாதகமான வளர்ச்சி உத்வேகத்திற்கு தொடர்ச்சியாக வழிவகுத்ததாக கிடைப்பனவாகவிருந்த முன்கூட்டிய குறிகாட்டிகள் பிரதிபலிக்கின்றன. கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் 2024ஆம் ஆண்டின் ஒத்தோபர் மற்றும் நவெம்பர் மாதங்களில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் அதிகரித்தது.[12] சாதகமான முன்னேற்றங்களைப் பிரதிபலித்து, தயாரிப்பு கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் காலாண்டின் அனைத்து மூன்று மாதங்களிலும் விரிவாக்கங்களைப் பதிவுசெய்தன. அதேவேளை, கட்டடவாக்க கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் 2024 ஒத்தோபரிலும் நவெம்பரிலும்[13] விரிவடைந்து, கட்டடவாக்க நடவடிக்கைகளில் மீட்பினைப் பிரதிபலித்தது. பணிகள் நடவடிக்கைகளிற்கமைவாக, பணிகள் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணின் (வியாபார நடவடிக்கைச் சுட்டெண்) வலுவான தாக்குப்பிடிக்கும் தன்மை 2024ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டில் ஒட்டுமொத்தப் பணிகள் நடவடிக்கைகளில் சாதகமான வளர்ச்சியை எடுத்துகாட்டுகின்றது. மேலும், தங்குமிடம், உணவு மற்றும் குடிபானப் பணிகள், மற்றும் போக்குவரத்து, தொடர்பாக பல்வேறு முக்கிய நடவடிக்கைகளின் சாதகமான அபிவிருத்திகள், சுற்றுலாப் பயணிகளின் வருகையின் அதிகரிப்பிலிருந்து நன்மையடைந்தமையும் பணிகள் நடவடிக்கைகளின் அபிவிருத்திக்கு பங்களித்துள்ளன என எதிர்பார்க்கப்படுகின்றது. சாதகமற்ற

[12] கிடைக்கப்பெற்ற அண்மையத் தரவுகளின்படி 2024 திசெம்பரிலும் இதே வகையான போக்கு அவதானிக்கப்பட்டது.

[13] கட்டடவாக்க கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் 2024 திசெம்பரில் 51.4ஆக காணப்பட்டு, கட்டடவாக்க நடவடிக்கைகளில் தொடர்ச்சியான விரிவாக்கத்தை எடுத்துக்காட்டியது.

வானிலை நிலைமைகளினால் பெரிதும் செல்வாக்குட்பட்டு, வேளாண்மை நடவடிக்கைகள் 2024ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டுப்பகுதியில் கலப்பான செயலாற்றத்தினை வெளிப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**வரைபடம் 11: கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்களின் அசைவுகள்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

செலவினப் பக்கத்தில், நிலையான விலைகளின் அடிப்படையில், ஆதிக்கம் செலுத்தும் செலவினக் கூறான நுகர்வுச் செலவினம் சாதகமான வளர்ச்சியைத் தொடர்ந்தும் பதிவுசெய்த அதேவேளை, 2024ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் முதலீட்டுச் செலவினமும் கணிசமான விரிவாக்கமொன்றை காண்பித்தது. மறுபுறத்தில், பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதியின் வளர்ச்சி வேகம், உண்மை நியதிகளில், ஏற்றுமதியை விட அதிகமாக இருந்ததால், தேறிய வெளிநாட்டுக் கேள்வி 2024ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்தது.

**அட்டவணை 02: கூட்டுக் கேள்வி (தற்காலிகமானது)**

| விடயம் | நிலையான (2015) விலைகள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2023 கா3 | | 2024 கா4 | | 2023 9 மாதங்கள் | | 2024 9 மாதங்கள் | |
| | ரூ. பில் | ஆண்டிற்கு ஆண்டு, % | ரூ. பில் | ஆண்டிற்கு ஆண்டு, % | ரூ. பில் | ஆண்டிற்கு ஆண்டு, % | ரூ. பில் | ஆண்டிற்கு ஆண்டு, % |
| உள்நாட்டு கேள்வி | 2,881 | 0.2 | 3,172 | 10.1 | 8,653 | -6.1 | 9,236 | 6.7 |
| நுகர்வு | 2,415 | 0.8 | 2,503 | 3.6 | 6,808 | -4.8 | 6,971 | 2.4 |
| முதலீடு (மொத்த மூலதன உருவாக்கம்) | 466 | -2.8 | 669 | 43.6 | 1,845 | -10.8 | 2,265 | 22.8 |
| தேறிய வெளிநாட்டுக் கேள்வி | 107 | 65.3 | -20 | -119 | 140 | 1,208.8 | 14 | -90.1 |
| + பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகள் | 729 | 28.9 | 794 | 8.9 | 1,997 | 11.5 | 2,259 | 13.1 |
| - பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிகள | 622 | 24.2 | 814 | 30.8 | 1,857 | 3.0 | 2,245 | 20.9 |
| **மொத்த உள்நாட்டு உற்பத்தி** | **2,988** | **1.6** | **3,152** | **5.5** | **8,794** | **-4.5** | **9,250** | **5.2** |


மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

### 3.3. நாணயத் துறை

#### வட்டி வீதங்கள்

***தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாடு மற்றும் குறைக்கப்பட்ட நாட்டின் இடைநேர்வு மிகை என்பனவற்றிற்கு பதிலிறுத்தும் வகையில், அரச பிணையங்கள் மீதான விளைவு வீதங்கள் உள்ளடங்கலான சந்தை வட்டி வீதங்கள், 2024 மற்றும் 2025 இன் முற்பகுதியில் குறிப்பிடத்தக்களவு குறைவடைந்தன.***

**வரைபடம் 12: தேர்ந்தெடுக்கப்பட்ட சந்தை வட்டி வீதங்களின் அசைவு**




மூலம்: இலங்கை மத்திய வங்கி


இலங்கை மத்திய வங்கியின் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாட்டின் ஊடுகடத்தலினை பிரதிபலிக்கும் வகையில், ஒட்டுமொத்த வட்டி வீதக் கட்டமைப்பு தொடர்ந்து கீழ்நோக்கி நகர்ந்தது. 2024 நவம்பரில், மத்திய வங்கியின் ஒற்றைக் கொள்கை வட்டி வீதமான ஓரிரவு கொள்கை வீதத்தின் அறிமுகமானது நாணயக் கொள்கை சமிக்ஞையிடுதலை மேம்படுத்த உதவியது. இதற்கமைய, நெகிழ்சிச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கு கட்டமைப்பின் கீழ் மத்திய வங்கியின் தொழிற்பாட்டு இலக்காக விளங்கும் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம், உள்நாட்டுப் பணச் சந்தையில் அதிகரித்த நடவடிக்கையினால் ஆதரிக்கப்பட்டு, ஓரிரவு கொள்கை வீதத்துடன் இசைந்து செல்லும் விதத்தில் சீராக்கப்பட்டது. சந்தை வைப்பு மற்றும் கடன்வழங்கல் வட்டி வீதங்கள் ஆகிய இரண்டும் குறிப்பிடத்தக்களவில் குறைந்துள்ளதுடன் வைப்பு வட்டி வீதங்களின் குறைப்பானது இக்காலப்பகுதியில் அதிகமாகக் காணப்படுகின்றது. சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மை கடன்வழங்கல் வட்டி வீதத்தின் மூலம் பிரதிபலிக்கப்படுகின்ற உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் முதன்மை வாடிக்கையாளர்களுக்கு விதிக்கப்படும் கடன்வழங்கல் வட்டி வீதங்கள், சனவரி 2025 வரை குறிப்பிடத்தக்களவு குறைவடைந்து, தொடர்ந்து பல வாரங்களுக்கு 9.00 சதவீதத்திற்கும் குறைவாக காணப்பட்டன. அதேவேளை, சராசரி நிறையேற்றப்பட்ட புதிய சிறிய மற்றும் நடுத்தர

தொழில்முயற்சிகளுக்கான வீதத்தால் பிரதிபலிக்கப்படும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளிற்கு வழங்கப்பட்ட புதிய கடன்களுக்கான வட்டி வீதங்களும் 2024 இல் குறிப்பிடத்தக்களவு குறைவடைந்தன. இருப்பினும், ஒட்டுமொத்த சந்தைக் கடன்வழங்கல் வட்டி வீதங்கள் குறைவடைந்த போதிலும், சொற்பளவிலான/சிறிதளவிலான கடன்பாட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் வீதங்கள் பிற சந்தைக் கடன் வட்டி வீதங்களுடன் ஒப்பிடுகையில் நெகிழ்ச்சியற்றதன்மையினைக் கொண்டிருந்தன.

தளர்த்தப்பட்ட நாணய நிலைமைகள், மேம்பட்ட இறைச் செயலாற்றம் மற்றும் கடன் மறுசீரமைப்பு முறைமையின் முன்னேற்றத்தால் உந்தப்பட்ட நேர்மறையான சந்தை மனோபாவங்கள் ஆகியவற்றை பிரதிபலித்து, 2024 நவம்பர் நடுப்பகுதியிலிருந்து அரச பிணையங்கள் மீதான விளைவு வீதங்கள் தொடர்ந்து குறைவடைந்தன. அதன்படி, 2023 இறுதியிலிருந்து 2025 சனவரி இறுதி வரை, திறைசேரி உண்டியல்கள் மீதான விளைவு வீதங்கள் 4.46–6.58 சதவீத புள்ளிகளினால் குறைவடைந்தன.

பெயரளவிலான சந்தை வட்டி வீதங்கள் கீழ்நோக்கி சீராக்கப்பட்ட போதிலும், அடையப்பட்ட பணவீக்க மட்டங்களை பயன்படுத்தி அளவிடும் போது, நிலவுகின்ற பணச்சுருக்க நிலைமைகளினால், உண்மை வட்டி வீதங்கள் தொடர்ந்தும் நேர்மறையானதாகக் காணப்படுகின்றன. இருப்பினும், 2025 ஆம் ஆண்டின் இரண்டாம் அரையாண்டில் எதிர்பார்க்கப்படும் பணவீக்கத்தின் இலக்கை நோக்கிய ஒருங்கிணைப்பு உண்மை வட்டி வீதங்களில் சாத்தியமான சரிவை அடையச் செய்யும்.

**வரைபடம் 13: அவதானிக்கப்பட்ட உண்மை வட்டி வீதங்கள்**




*குறிப்பு: மாதாந்த உண்மை வட்டி வீதம் ஆண்டிற்கு அண்டு முதன்மைப் பணவீக்க வீதத்திற்கான பெயரளவு வட்டி வீதத்தை சீராக்குவதன் மூலம் பெறுவிக்கப்படுகின்றது (கொ.நு.வி.சு – அடிப்படையாகக் கொண்டது)*

மூலம்: இலங்கை மத்திய வங்கி


**உள்நாட்டுப் பணச் சந்தைத் திரவத்தன்மை**

***இலங்கை மத்திய வங்கியின் அந்நியச் செலாவணி கொடுக்கல்வாங்கல்களின் முக்கிய காரணமாக 2024 இல் உள்நாட்டுப் பணச் சந்தையில் திரவத்தன்மை நிலைமைகள் குறிப்பிடத்தக்களவில் மேம்பட்டன.***

மத்திய வங்கியின் தேறிய அந்நியச் செலாவணிக் கொள்வனவுகளின் முக்கிய காரணமாக உள்நாட்டுப் பணச் சந்தையில் திரவத்தன்மை நிலைமைகள், குறிப்பாக 2024 இன் நான்காம் காலாண்டில், மேம்பட்டன. இருப்பினும், மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல் மற்றும் பகுதியளவிலான திறைசேரி முறிக் கையிருப்புகளின் முதிர்ச்சிகள், மத்திய வங்கியின் திறைசேரி முறிக் கையிருப்புகளுக்கான கூப்பன் கொடுப்பனவுகள், மற்றும் நாணய மீளப்பெறுகைகள், என்பன, தேறிய அடிப்படையில், 2024 இல் உள்நாட்டு பணச் சந்தைத் திரவத்தன்மையில் குறைப்பை ஏற்படுத்தின. ஏறத்தாழ ரூ. 150 பில்லியன் சராசரியுடன், மேம்பட்ட திரவத்தன்மை நிலைமைகளானது 2025 இன் முற்பகுதியில் தொடர்ந்தன. இருப்பினும், பங்கேற்பு நிறுவனங்களிடையே தொடர்ந்த சமச்சீரற்ற திரவத்தன்மை விநியோகமானது அவதானிக்கப்பட்டது.

சந்தை பங்கேற்பாளர்களிடையே திரவத்தன்மை கிடைக்கப்பெறுவதை உறுதி செய்வதற்காக, திறந்த சந்தை தொழிற்பாடுகளின் கீழ், ஓரிரவு மற்றும் குறுகிய கால நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள் மூலமாக மத்திய வங்கி தேவைக்கேற்ப திரவத்தன்மையை உட்செலுத்தியது. இருப்பினும், சந்தைப் பங்கேற்பாளர்களுக்கிடையேயான நடவடிக்கை மேம்பாட்டுடன் திரவத்தன்மை நிலைமைகள் குறிப்பிடத்தக்க மிகையில் தொடர்ந்து காணப்பட்டமையினால், மத்திய வங்கி திறந்த சந்தை தொழிற்பாடுகளை படிப்படியாக குறைத்தது. 2024 திசெம்பரின் இரண்டாமரை முதல் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணச் சந்தை வீதமானது ஓரிரவுக் கொள்கை வீதத்தில் இல்லாவிடில் அதன் அண்மையில் தொடர்ந்து காணப்பட்ட அதே வேளையில் சராசரி நிறையேற்றப்பட்ட மீள்கொள்வனவு வீதமும் பரந்தளவில் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதத்தின் அசைவுகளுடன் இசைந்துச் சென்றது.

**வரைபடம் 14: ஓரிரவு திரவத்தன்மை, ஓரிரவு கொள்கை வீதம், சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம் மற்றும் துணைநில் வசதி வீதங்களின் போக்கு**





மூலம்: இலங்கை மத்திய வங்கி

**உள்நாட்டுக் கொடுகடன் நிலைமைகள் மற்றும் நாணய நிரம்பல்**

***வங்கித்தொழில் முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் விரிவாக்கத்துடனான தனியார் துறைக்கான கொடுகடனின் வலுவான வளர்ச்சி, 2024 இல் விரிந்த பணத்தின் ($M_{2b}$) தொடர்ச்சியான விரிவாக்கத்திற்கு துணைபுரிந்தன.***

உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட தனியார் துறைக்கான கொடுகடன் 2024 மே தொடக்கம் வலுவடைந்து காணப்பட்டதுடன் சமீபத்திய மாதங்களில் எதிர்பார்த்ததை விட வேகமான வீதத்தில் விரிவடைந்தது. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட தனியார் துறைக்கான கொடுகடனானது 2024இல் ஏறத்தாழ ரூ. 790 பில்லியனால் குறிப்பிடத்தக்களவு விரிவடைந்து 10.7 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. குறைந்த சந்தைக் கடன்வழங்கல் வட்டி வீதங்கள் மற்றும் இறக்குமதி கேள்வி மற்றும் உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கையில் எதிர்பார்க்கப்படும் தொடர்ச்சியான விரிவாக்கம் ஆகியவற்றால் ஆதரிக்கப்பட்டு தனியார் துறைக்கான கொடுகடன் வளர்ச்சி எதிர்வரும் காலப்பகுதியிலும் நிலைத்திருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**வரைபடம் 15: உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் தனியார் துறைக்கான கொடுகடனின் மாதாந்த மாற்றம்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி


வங்கித்தொழில் முறைமையினால் அரசிற்கான தேறிய கொடுகடனானது 2024ஆம் ஆண்டில் சிறிதளவில் சுருக்கமடைந்ததற்கு மத்திய வங்கியினால் அரசிற்கான தேறிய கொடுகடனில் ஏற்பட்ட சுருக்கம் பிரதான காரணமாக அமைந்த அதேவேளை உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் அரசிற்கான தேறிய கொடுகடனில் ஓர் அதிகரிப்பு பதிவு செய்யப்பட்டது. மத்திய வங்கியினால் அரசிற்கான தேறிய கொடுகடன் 2024 இல் பாரிய சுருக்கத்தை பதிவு செய்தமைக்கு திறைசேரி உண்டியல்களின் குறைப்பும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் துணைநில் கடன்வழங்கல் வசதியின் பயன்பாட்டில் ஏற்பட்ட குறைப்பும் முக்கிய காரணங்களாக அமைந்தன. அதேவேளை, திறைசேரி உண்டியல்களில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் முதலீடு அதிகரிப்பதை பிரதிபலிக்கும் வகையில் அவற்றின் அரசிற்கான தேறிய கொடுகடனில் ஓர் அதிகரிப்பு பதிவு செய்யப்பட்டது.

2024ஆம் ஆண்டில், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் அரசிற்கு சொந்தமான தொழில்முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட கொடுகடன் சுருக்கமடைந்தமைக்கு இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கொழும்பு வர்த்தக உரம், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை, இலங்கை மின்சார சபை மற்றும் சிறிலங்கன் எயர்லைன்ஸ் உள்ளடங்கலாக முக்கிய அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் தேறிய மீள்கொடுப்பனவுகள் காரணங்களாக அமைந்தன.

வெளிநாட்டுத் துறையில் அவதானிக்கப்பட்ட முன்னேற்றங்களை பிரதிபலிக்கும் வகையில், தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 2024 இல் குறிப்பிடத்தக்களவு மேம்பட்டன. இது மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் அதிகரிப்பிற்கு வழிவகுத்த உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியின் தேறிய கொள்வனவுகளினைப் பிரதிபலிக்கின்றது. தொடர்ச்சியாக ஏறத்தாழ 3 ஆண்டுகளாக எதிர்மறை மட்டத்தில் இருந்த மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டு சொத்துக்கள் ஒத்தோபர் 2024இல் நேர்மறையாக மாறியது. அதேவேளை, 2024ஆம் ஆண்டில் இலங்கை ரூபாவின் உயர்வடைதலின் மூலம் ஏற்பட்ட மீள்மதிப்பீட்டு தாக்கங்கள் காரணமாக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டு சொத்துக்கள் வீழ்ச்சியடைந்தன.

இவ் அபிவிருத்திகள் மற்றும் தளர்த்தப்பட்ட நாணய நிலைமைகளுக்கமைவாக, ஆண்டிற்கான விரிந்த பண ($M_{2b}$) வளர்ச்சியானது 7.3 சதவீதம் கொண்ட 2023 இறுதியுடன் ஒப்பிடுகையில் 2024 இன் இறுதியில் 8.6 சதவீதத்திற்கு உயர்வடைந்தது.

**வரைபடம் 16: விரிந்த பணத்தின் ($M_{2b}$) ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சிக்கான பங்களிப்பு**




மூலம்: இலங்கை மத்திய வங்கி


### 3.4. வெளிநாட்டுத் துறை

***அதிகரித்த உட்பாய்ச்சல்கள், வலுவடைந்த ஒதுக்கு நிலைமை மற்றும் இலங்கை ரூபாவின் மேலதிக உறுதிப்பாடு என்பனவற்றின் காரணமாக ஏற்பட்ட மதிப்பிடப்பட்ட நடைமுறைக் கணக்கு மிகையொன்றினால் உந்தப்பட்டு வெளிநாட்டுத் துறை 2024இல் அதன் நேர்மறையான உத்வேகத்தைத் தொடர்ந்தது.***

**சென்மதி நிலுவை**

நடைமுறைக் கணக்கு மீதி 2024இல் தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாக மிகையொன்றினை பதிவு செய்துள்ளதாக மதிப்பிடப்பட்டு, ஆண்டுக் காலப்பகுதியில் ஏற்பட்ட நேர்மறையான முன்னேற்றங்களைப் பிரதிபலிக்கின்றது. வர்த்தகப் பற்றாக்குறையானது 2023இல் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 4.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024இல் ஐ.அ.டொலர் 6.1 பில்லியனுக்கு விரிவடைந்தது. 2023 உடன் ஒப்பிடுகையில் 2024இல் இறக்குமதி செலவினத்தில் ஏற்பட்ட பாரிய விரிவாக்கம் (12.1 சதவீதத்தால்) ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்டதை (7.2 சதவீதத்தால்) விட விஞ்சிக் காணப்பட்டமை இதற்கு முக்கிய காரணமாகும். இருப்பினும், சுற்றுலாத் துறையிலிருந்தான வருவாய்களின் வடிவிலான உட்பாய்ச்சல்கள், தொழிலாளர் பணவனுப்பல்கள் தொடர்பான உட்பாய்ச்சல்கள் மற்றும் ஏனைய சேவைகள் உட்பாய்ச்சல்கள் என்பன எதிர்பார்த்த மட்டங்களை விட சிறந்த முறையில் செயற்பட்டுள்ளன.


**வரைபடம் 17: வர்த்தக கணக்கு**




மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
இலங்கைச் சுங்கம்

2024இல் 2 மில்லியனிற்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகளின் வருகைகளுடன், சுற்றுலாத் துறையிலிருந்து மதிப்பிடப்பட்ட வருவாய்கள் ஐ.அ.டொலர் 3.2 பில்லியனிற்கு மேம்பட்டு, 2023 உடன் ஒப்பிடுகையில் 53.2 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தன. கடல் போக்குவரத்துப் பணிகள் மற்றும் கணனி மற்றும் தகவல் தொழில்நுட்பம்/வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக்கொள்ளலுடன் தொடர்புடைய பணிகள் என்பன 2024இல் சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள் நீங்கலாக பணிகள் துறைக்கான முக்கிய பங்காளர்களாகக் காணப்பட்டன. இதற்கமைய, 2023இல் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 3.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024இல் சுற்றுலாத்துறை நீங்கலாக பணிகள் துறைக்கான உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 3.7 பில்லியனாகக் காணப்பட்டது. தொழிலாளர் பணவனுப்பல்களும் 2023இல் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 6.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024இல் ஐ.அ.டொலர் 6.6 பில்லியனிற்கு மேம்பட்டு, 10.1 சதவீத வளர்ச்சியினைப் பதிவுசெய்தது.

**வரைபடம் 18: தொழிலாளர் பணவனுப்பல்கள் மற்றும் சுற்றுலாத்துறை**





மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
உரிமம் பெற்ற வங்கிகள்

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை


நடைமுறைக் கணக்கின் செயலாற்றம் 2024இல் நேர்மறையான அபிவிருத்திகளைக் காண்பித்த போதிலும், நிதியியல் கணக்கு மட்டுப்படுத்தப்பட்ட பாய்ச்சல்களுடன் மெதுவடைந்து காணப்பட்டது. நேரடி முதலீட்டு நிறுவனங்களுக்கான வெளிநாட்டுக் கடன்கள் உள்ளடங்கலாக வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் 2023 உடன் ஒப்பிடுகையில் 2024இல் சிறிதளவு அதிகரிப்பைக் காண்பித்தன. அரச பிணையங்கள் சந்தையில் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் 2024இல் ஐ.அ.டொலர் 179 மில்லியன் பெறுமதியான தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தன. இருப்பினும், இப்போக்கு ஆண்டின் இறுதி மூன்று மாதங்களில் தேறிய உட்பாய்ச்சல்களாக மாற்றமடைந்தது. அதேவேளை, கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் முதலாந்தரச் சந்தையில் காணப்பட்ட வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல்களால் உந்தப்பட்டு ஐ.அ.டொலர் 33 மில்லியன் தேறிய உட்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தன.

**வரைபடம் 19: நடைமுறைக் கணக்கு**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 20: நிதியியல் கணக்கு**





மூலம்: இலங்கை மத்திய வங்கி

**செலாவணி வீதம்**

இலங்கை ரூபாவானது 2024இன் இரண்டாம் அரையாண்டுக் காலப்பகுதியில் காணப்பட்ட சில இடைக்கிடையான தேய்மான அழுத்தங்களுக்கு மத்தியிலும் 2024இன் முதலரையாண்டுக் காலப்பகுதியிலிருந்து ஆண்டு முழுவதும் அதன் உயர்வடையும் போக்கினைப் பேணியது. அதிகரித்த தொழிலாளர் பணவனுப்பல்கள், உயர்வடைந்த பணிகள் ஏற்றுமதிகள் மற்றும் ஏற்றுமதி பெறுகைகளின் மாற்றல்கள் என்பனவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள் வலுவாக காணப்பட்டபோதிலும், உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் திரவத்தன்மை அவ்வப்போது குறிப்பாக 2024 ஓகத்து, செத்தெம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் வீழ்ச்சியடைந்தது. இவ் அழுத்தங்கள் முக்கியமாக அதிகரித்த இறக்குமதிக் கொடுப்பனவுகளினால் உந்தப்பட்டிருந்ததுடன் குறிப்பிட்ட நாட்களில் ஒரு நாளுக்குள்ளேயான தளம்பல்களை சீராக்குவதற்கு மத்திய வங்கி தலையிடுவதைத் தேவைப்படுத்தியது. இருப்பினும், மத்திய வங்கி தேறிய அடிப்படையில் ஐ.அ.டொலர் 2.8 பில்லியனிற்கும் அதிகமாகக் கொள்வனவு செய்து, 2024இல் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் முன்னொருப்போதுமில்லாத அதிகூடிய வருடாந்த தேறிய கொள்வனவுகளைக் குறிக்கின்றது. மத்திய வங்கியின் பாரிய கொள்வனவுகளுக்கு மத்தியிலும் கூட, 2024இல் அமெரிக்க டொலருக்கு எதிராக ரூபா 10.7 சதவீதத்தால் அதிகரித்தது. இருப்பினும், 2025 சனவரி 28இல் உள்ளவாறு ரூபாவானது 2.0 சதவீதத்தால் தேய்வடைந்ததுடன் 2025இன் முற்பகுதியில் சில தளம்பல்கள் அவதானிக்கப்பட்டிருந்தன. அதேவேளை, குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்றவகையில் இலங்கை ரூபாவானது 2024ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் யூரோ, ஸ்ரேலிங் பவுன், சீன யுவான், யப்பானிய யென், இந்திய ரூபா மற்றும் அவுஸ்திரேலிய டொலர் போன்ற ஏனைய முக்கிய நாணயங்களுக்கெதிராக உயர்வடைந்தது.

**வரைபடம் 21: செலாவணி வீத அசைவுகள்**





மூலம்: இலங்கை மத்திய வங்கி

**ஒதுக்குச் சொத்துக்கள்**

மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2023 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 4.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 இறுதியில் ஐ.அ.டொலர் 6.1 பில்லியனுக்கு அதிகரித்தன. 2023 மற்றும் 2024 இறுதிகளிலுள்ளவாறான மொத்த அலுவல்சார் ஒதுக்குகளானது பயன்படுத்தக்கூடிய தன்மை தொடர்பிலான நிபந்தனைகளுக்குட்பட்ட சீன மக்கள் வங்கியிடமிருந்தான பரஸ்பர பரிமாற்றல் வசதியினை உள்ளடக்குகின்றன. ஒதுக்குகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பானது முக்கியமாக 2024இல் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்து மத்திய வங்கியின் கணிசமான தேறிய வெளிநாட்டுச் செலாவணி ஈர்த்தல்கள் மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் மூன்றாம் தொகுதி உள்ளடங்கலாக பல்புடை நிறுவனங்களிலிருந்தான உட்பாய்ச்சல்கள் என்பவற்றினால் உந்தப்பட்டது. அதேவேளை, மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் இறக்குமதி உள்ளடக்கம் (சீன மக்கள் வங்கியிடமிருந்தான பரஸ்பர பரிமாற்றல் வசதி உள்ளடங்கலாக) திசெம்பர் 2024 இறுதியில் 3.9 இறக்குமதி மாதங்களாகக் காணப்பட்டது.

**வரைபடம் 22: மாதாந்த மொத்த அலுவல்சார் ஒதுக்குகள், தேறிய உள்ளீர்ப்பு மற்றும் ஒதுக்கு போதுமாந்தன்மை**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### 3.5. இறைத் துறை[14]

***அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட வலுவான அரசிறையை அடிப்படையாகக் கொண்ட இறைத் திரட்சி வழிமுறைகளின் காரணமாக, 2024 நவம்பரில் முடிவடைகின்ற பதினொரு மாத காலப்பகுதியில் இறைத்துறைச் செயலாற்றம் தொடர்ந்தும் முன்னேற்றமடைந்தது. இத்தகைய வழிமுறைகள் கணிசமான ஆரம்ப மீதி மிகைக்கும் குறைவடைந்த ஒட்டுமொத்த வரவு செலவுத்திட்ட பற்றாக்குறைக்கும் வழிவகுத்தது.***


2024 நவம்பரில் முடிவடைகின்ற பதினொரு மாத காலப்பகுதியில் தொடர்ச்சியான வலுவான இறைத் திரட்சி வழிமுறைகளானது அனைத்து முக்கிய இறை மீதிகளையும் அதாவது, ஒட்டுமொத்த இறை மீதி, நடைமுறைக் கணக்கு மீதி மற்றும் ஆரம்ப மீதி என்பவற்றையும் பெயரளவு நியதிகளிலும் எறிவுசெய்யப்பட்ட மொ.உ.உற்பத்தியின் சதவீதமாகவும் முன்னேற்றமடையச் செய்துள்ளது. இதற்கமைய, ஆரம்ப மீதி 2024ஆம் ஆண்டின் முதலாவது பதினொரு மாதங்களுக்கு ரூ. 927.8 பில்லியன் குறிப்பிடத்தக்க மிகையை அடைந்த வேளையில், மதிப்பாய்வு செய்யப்பட்ட ஒட்டுமொத்த இறைப் பற்றாக்குறை ரூ. 1,217.3 பில்லியனாகக் குறைவடைந்தது.

2024 நவம்பரில் முடிவடைகின்ற பதினொரு மாத காலப்பகுதியில், அரசாங்கத்தின் மொத்த அரசிறை மற்றும் கொடைகள் 2023இன் அதையொத்த காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் கணிசமாக அதிகரித்தன. இவ்வதிகரிப்பானது முக்கியமாக பெறுமதி கூட்டப்பட்ட வரியிலிருந்தான அதிகளவிலான வரி வருமானங்களாலும் காலால் தீர்வைகளாலும் தூண்டப்பட்டதுடன் இத்தகைய விடயப்பரப்புகளின் மீதான அண்மைய சீர்திருத்தங்களாலும் பகுதியளவில் விரிவடையும் பொருளாதார நடவடிக்கைகளாலும் பங்களிப்புச்செய்யப்பட்டது. அதேவேளை, தொடர்ச்சியான

[14] 2024 நவம்பர் வரை மாத்திரமே இறைத் தரவுகள் கிடைப்பனவாக காணப்பட்டன.

கொள்கைச் சீர்திருத்தங்கள் மற்றும் மேம்பட்ட வரி நிர்வாக நடவடிக்கைகள் 2024 நவம்பரில் முடிவடைகின்ற பதினொரு மாதங்களில் வருமான வரிச் சேகரிப்பின் குறிப்பிடத்தக்க வருடாந்த அதிகரிப்புக்கு வழிவகுத்தன. இது மொத்த வரி வருவாய் சேகரிப்பின் 28.8 சதவீத பங்கைக் குறிக்கின்றது. 2024 நவம்பரில் முடிவடைந்த பதினொரு மாதங்களில், வரி அல்லாத வருவாயும் முக்கியமாக வட்டி வருமானத்திலிருந்து அதிகரித்த பெறுகையின் காரணமாக வளர்ச்சியடைந்தது. அதேவேளை, 2024இல் முடிவடைந்த பதினொரு மாதங்களில் மொத்த செலவினம் முந்தைய ஆண்டை விட மிதமான ஆண்டுக்காண்டு அதிகரிப்பைப் பதிவுசெய்துள்ளது. மதிப்பாய்வு செய்யப்பட்ட காலகட்டத்தில் மூலதனச் செலவு மற்றும் தேறிய கடன்வழங்கல் அதேபோன்று சம்பளம், மானியங்கள் மற்றும் மாற்றல்கள் போன்ற நடைமுறைச் செலவினம் அதிகரித்த போதிலும், அரசாங்கப் பிணையங்களின் விளைவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சி, தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாடு மற்றும் குறைக்கப்பட்ட இடர்நேர்வு மிகை என்பன காரணமாக வட்டிச் செலவுகள் குறிப்பிடத்தக்க குறைவொன்றினைப் பதிவுசெய்தன.

**வரைபடம் 23: முக்கிய இறை மீதிகள்**




மூலம்: நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

2024 நவம்பர் இறுதியில் முடிவடைந்த பதினொரு மாத காலப்பகுதியில், அரசாங்கமானது பன்னாட்டு மூலதனச் சந்தைகளை அணுகுவதன் மீது காணப்படுகின்ற வரையறைகளின் காரணமாக வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையைப் பூர்த்தி செய்வதற்கு முக்கியமாக உள்நாட்டு மூலங்களில் தொடர்ச்சியாக தங்கியிருந்தது. அதேவேளை, தேறிய வெளிநின்ற மத்திய அரச படுகடன்[15] 2023இன் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ. 28.7 றில்லியனிலிருந்து 2024 நவம்பர் இறுதியளவில் ரூபா நியதிகளில் ரூ.28.2 றில்லியனிற்குக் சிறிதளவு குறைவடைந்தது.

மேலும், நாட்டின் பொருளாதார மீட்சிப் பயணத்தில் முக்கியமான மைல்கல்லொன்றினைக் குறிக்கும் வகையில், அரசாங்கம் ஒரு சிறிய பகுதியைத் தவிர அதன் படுகடன் மறுசீரமைப்புச் செயன்முறையை வெற்றிகரமாக நிறைவு செய்தது. மேலும், இது 2024 ஆம் ஆண்டு இறுதிக்குள்

[15] *இலங்கையின் வெளிநாட்டு பொதுப் படுகடன் பணிக்கொடுப்பனவுகள் தொடர்பில் 2022 ஏப்பிறல் 12 அன்று நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் வெளியிடப்பட்ட இடைக்கால கொள்கை அறிவிப்பின் பின்னர் நிலுவையிலுள்ள பல்வேறு படுகடன் பணிக் கொடுப்பனவுகளை வெளிநின்ற மத்திய அரச படுகடன் உள்ளடக்கவில்லை. இப்படுகடன் பணிக் கொடுப்பனவுகள் பாதிக்கப்பட்ட படுகடனின் நிலுவையிலுள்ள வட்டிக் கொடுப்பனவுகளினை உள்ளடக்கியுள்ளதுடன் இடைக்காலக் கொள்கையின் பிரகாரம் இவ்வட்டிக் கொடுப்பனவுகள் மூலதனமாக்கப்பட வேண்டுமெனக் கருதப்படுகின்றது. மேலும், கடன் புள்ளிவிவரங்கள் தேறிய அடிப்படையில் (தேறிய வைப்புக்கள்) வழங்கப்படுகின்றன.*


கொடுகடன் வழங்குநர்கள் மற்றும் வெளிநாட்டுப் பங்காளர்களுடனான உறவுகளை இயல்பாக்குவதற்கு வழிவகுத்தது. இந்த முன்னேற்றங்களைத் தொடர்ந்து, முன்னணி பன்னாட்டுத் தரமிடல் முகவராண்மைகளான பிட்ச் மற்றும் மூடிஸ் ஆகியவை 2024 திசெம்ரில் இலங்கையின் வெளிநாட்டு நாணய தரமிடல்களை முறையே RD மற்றும் Ca இலிருந்து CCC+ மற்றும் Caa+ ஆக மேம்படுத்தியதுடன், இது நாட்டின் இடர்நேர்வு மிகையினை குறிப்பிடத்தக்க அளவில் குறைவடையச் செய்தது. வெளிப்புறப் பாதிப்படையக்கூடியதன்மைகளை நிவர்த்தி செய்வதில் இலங்கையின் முன்னேற்றத்தையும் நிலையான வளர்ச்சியை அடைவதற்கான அதன் முயற்சிகளையும் பன்னாட்டுச் சமூகம் அங்கீகரிப்பதனை இம்மேம்பாடுகள் பிரதிபலிக்கின்றன.

### 3.6. நிதியியல் துறை

***பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டின் படிப்படியான மீட்டெடுப்புடன் 2024இல் உள்நாட்டு பேரண்டநிதியியல் நிலைமைகள் தொடர்ந்து மேம்பட்டன.***


சாதகமான பொருளாதார வளர்ச்சி மற்றும் பணச்சுருக்க நிலைமைகள் காரணமாக, குடியிருப்புக்கள் மற்றும் நிறுவனங்களின் ஐந்தொகைகள் மீதான அழுத்தம் ஓரளவு குறைக்கப்பட்டு இது கடன் மீள்கொடுப்பனவு திறனை மேம்படுத்துகிறதுடன் நிதித் துறையில் கொடுகடன் இடர்நேர்வினையும் குறைக்கிறது. மொத்த உள்நாட்டு உற்பத்தியிற்கான கொடுகடன் இடைவெளி மூலம் பிரதிபலிக்கப்படும் கொடுகடன் சுழற்சியானது படிப்படியான கடன் இடைவெளியின் விரிவடைதலுடன் விரிவாக்க கட்டத்திற்குள் முன்னேறியது. தனியார் துறைக்கான கடன் மீட்சி மற்றும் தொடர்ச்சியான இறைத் திரட்சி ஆகியவற்றால் அரச துறைக்கான நிதியியல் நிறுவனங்களின் வெளிப்படுத்துகையின் சார்பு குறைவடைகிறது.

**வரைபடம் 24: மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு கொடுகடன் இடைவெளி**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 25: பொது மற்றும் தனியார் துறைகளுக்கான நிதியியல் துறை வெளிப்படுத்துகை ***




** அரச மற்றும் தனியார் துறைகளுக்கான வங்கித் தொழில் மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் வெளிப்படுத்துகையை இது பிரதிபலிக்கின்றது.*

மூலம்: இலங்கை மத்திய வங்கி

பேரண்டப்பொருளாதார நிலைமைகளின் தளர்த்தலுக்கு மத்தியில் 2024 ஆம் ஆண்டில் நிதித் துறையின் மீண்டெழுந்தன்மை படிப்படியாக மேம்பட்டது. முக்கியமாக அதிகரித்த முதலீடுகள் மற்றும் கடன்கள் மற்றும் பெறுகைகள் காரணமாக இக் காலப்பகுதியில் மீளாய்வுக்குரிய வங்கித் துறையின் மொத்த சொத்துக்கள் அதிகரித்தன. அதற்கேற்ப, வங்கித்தொழில் துறையின் சொத்துக்கள் 2024 ஆம் ஆண்டின் இறுதியில் ஆண்டுக்காண்டு அடிப்படையில் 8.7 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்து ரூ. 22.2 டிறில்லியனாகக் காணப்பட்டது. தளர்வடையும் நாணயக் கொள்கை நிலைப்பாட்டின் மத்தியில் வங்கித்தொழில் துறையின் மொத்த கடன்கள் மற்றும் பெறுகைகள் 2024 ஆம் ஆண்டின் இறுதியில் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 4.1 சதவீதத்தினால் அதிகரித்தன.

நிலை 3 கடன் விகிதத்தின் மூலம் பிரதிபலிக்கப்படும் வங்கித் துறையின் ஒட்டுமொத்த கடன்தவறுகை இடர்நேர்வானது, 2023 இறுதியில் பதிவு செய்யப்பட்ட 12.8 சதவீதத்துடன் ஒப்பிடும்போது 2024 இறுதியில் 12.3 சதவீதமாகக் குறைந்தபோதிலும் இது நிதி நிறுவனத் துறையின் நிலை 3 கடன் விகிதத்தை விட அதிகமாக இருந்ததுடன் இது 2024 இறுதியில் 11.3 சதவீதமாகக் காணப்பட்டது. யூன் 2024 முதல் ஆண்டுக்காண்டு அடிப்படையில் சுருக்கமடைவது நிலை 3 கடன்களும் வங்கித்தொழில் துறையில் கொடுகடன் இடர்நேர்வின் படிப்படியான மெதுவடைதலை குறித்துக்காட்டுகிறது. வங்கித்தொழில் துறையின் வரிக்கு பின்னரான இலாபம் முன்னைய ஆண்டை விட 2024இல் கணிசமாக அதிகரித்தது. இதற்கேற்ப, வங்கித்தொழில் துறையின் வரிக்குப் பின்னரான இலாபம் 2023 இல் ரூ.188.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024இல் ரூ.309.8 பில்லியனை பதிவுசெய்தது.

திரவத்தன்மை காப்பீடு விகிதம் மற்றும் தேறிய உறுதியான நிதியிடல் விகதம் என்பவற்றினால் அளவிடப்படும் வங்கித்தொழில் துறையின் திரவத்தன்மை நிலைமைகள் முன்னைய ஆணடிறுதியுடன் ஒப்பிடுகையில் 2024 இறுதியில் மேம்பட்டது. வங்கித்தொழில் துறைக்கான ரூபாய் திரவத்தன்மை காப்பீடு விகிதம் 2023 இறுதியில் 34.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2024 இறுதியில் 349.9

சதவீதமாக மேம்பட்டு குறைந்தபட்ச ஒழுங்குமுறைத் தேவைப்பாடான 100 சதவீதத்திற்கு மேலதிகமாகவே காணப்பட்டது. இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் அதிகரித்தபோதிலும் ஒழுங்குமுறை மூலதனத்தின் மேலும் உயர்வான வளர்ச்சியின் விளைவாக வங்கித்தொழில் துறையின் மூலதன போதுமாந்தன்மை விகிதம் 2023 இறுதியில் காணப்பட்ட 17.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2024 இறுதியில் 18.4 சதவீதத்திற்கு கணிசமாக மேம்பட்டது. வங்கிகளின் ஒழுங்குமுறை மூலதனம் ஆண்டுக்காண்டு அடிப்படையில் 15.5 சதவீத குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. இது பிரசுரிக்கப்பட்ட தேறிய வருவாய்கள் மற்றும் தகுதிபெற்ற அடுக்கு-2 மூலதன கருவிகளின் அதிகரிப்பு மற்றும் தேறிய பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களின் வீழ்ச்சியினால் உந்தப்பட்டது. இது சாத்தியமான இழப்புக்களை உள்வாங்கும் அவையின் இயலுமை எடுத்துக்காட்டுகிறது. சாத்தியமான இழப்புகளை உறிஞ்சும் திறனை வலுப்படுத்தும் மூலதன இடையகங்களின் மேம்பாட்டை எடுத்துக்காட்டுகிறது.

முக்கியமாக நிதிக் குத்தகைகள, அடவுபிடித்தல் அல்லது தங்கக் கடன்கள் மற்றும் தனிநபர் கடன்களின் அதிகரிப்பு காரணமாக நிதி நிறுவனங்கள் துறை திசெம்பர் 2024 இன் இறுதியில் அதன் கடன்கள் மற்றும் முற்பணங்கள் சொத்துப்பட்டியலில் ஆண்டுக்காண்டு அடிப்படையில் 20.9 சதவீத விரிவாக்கத்தை பதிவு செய்தது. இந்தத் துறையின் மொத்த செயல்படாத கடன் விகிதம் திசெம்பர் 2023 இறுதியில் காணப்பட்ட 18.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2024 திசெம்பர் இறுதிக்குள் 11.3 சதவீதமாகக் குறைந்து, கொடுகடன் தரத்தில் ஓர் மேம்பாட்டினை குறித்துக்காட்டியது. துறையின் திரவத்தன்மை நிலை 2024 திசெம்பர் இறுதியில் ஒழுங்குமுறைத் தேவைப்பாட்டிற்கு மேலாகக் காணப்பட்டது. மேலும், இந்தத் துறை ரூ. 2024⁚25 நிதியாண்டின் முதல் ஒன்பது மாதக் காலப்பகுதியில் ரூ. 43.1 பில்லியன் வரிக்குப் பின்னரான இலாபங்களை அறிவித்ததுடன் 2024 திசெம்பர் இறுதியில் துறையானது 21.2 சதவீத மூலதன போதுமாந்தன்மை விகிதத்தை பதிவுசெய்தது.

பங்குச் சந்தை தொடர்பில், கொழும்பு பங்குச் சந்தை 2024இல் குறிப்பிடத்தக்கறவு முன்னேற்றங்களை பதிவுசெய்து அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண்ணில் 49.7 சதவீத வளர்ச்சியை பதிவுசெய்ததுடன் ஸ்டான்டர்ட் அன்ட் புவர் இலங்கை 20 என்பது 2024இல் 58.5 சதவீத வளர்ச்சியை பதிவுசெய்தது. அனைத்துப் பங்கு விலைச் சுட்டெணின் நேர்மறையான போக்கு 2025இல் தொடர்ந்து அனைத்துப் பங்கு விலைச் சுட்டெணானது வரலாற்றிலேயே முதல் முறையாக 17,000 சுட்டெண் புள்ளிகளை விஞ்சி ஓர் தாழ்ந்த வட்டிச் சூழலுக்கு மத்தியின் மேம்பட்ட முதலீட்டாளர் மனோபாவத்தினை பிரதிபலித்தது.


### 3.7. உலகளாவிய அபிவிருத்திகள்

***மிதமான பணவீக்கத்துடன் உலகளாவிய வளர்ச்சி நிலையாகுமென்ற எதிர்பார்ப்புமுக்கிய மத்திய வங்கிகள் நாணயக் கொள்கையை எச்சரிக்கையுடன் தளர்த்துவதனை வழிவகுக்கிறது. இருந்தபோதிலும் அதிகரித்த உலகளாவிய நிச்சயமற்ற தன்மைகள் மற்றும் கொள்கை மாற்றங்கள் நாணயக் கொள்கையை சாதாரணப்படுத்துவதன் வேகத்தை குறைத்து, வளர்ச்சி வாய்ப்புகளுக்கு இடர்நேர்வுகளை ஏற்படுத்துகிறது.***

உலகளாவிய ரீதியில் பணவீக்கம் மெதுவடையும்வேளையில் பெரும்பாலான மத்திய வங்கிகள் பொருளாதார நடவடிக்கைகளைத் தூண்டுவதற்காக தங்கள் நாணயக் கொள்கை நிலைப்பாட்டை

மெதுவான வேகத்தில் தளர்த்தத் தொடங்கியுள்ள அதே வேளையில் பணவீக்கம் அதன் இலக்கை அடைவதற்கான பாதையில் இருப்பதை உறுதி செய்வதில் எச்சரிக்கையாக உள்ளன. எவ்வாறாயினும், புவிசார் அரசியல் உறுதியின்மைகள், புதிய ஜனாதிபதியின் கீழ் அமெரிக்காவில் கொள்கை மாற்றத்தின் சாத்தியமான உலகளாவிய விளைவுகள் மற்றும் சில பிராந்தியங்களில் பணவீக்கப் போக்குகள் உள்ளடங்கலான உலகளாவிய நிச்சயமற்ற தன்மைகள், நாணயக் கொள்கையின் சாதாரணப்படுத்தலினை தாமதிக்கச்செய்து இது உலகளாவிய வளர்ச்சி வாய்ப்புகளுக்கு இடர்நேர்வுகளை ஏற்படுத்தியுள்ளது. பன்னாட்டு நாணய நிதியத்தின் உலக பொருளாதாரத் தோற்றப்பாடு சனவரி 2025 இற்றைப்படுத்தலின்படி, உலகளாவிய வளர்ச்சி 2025 மற்றும் 2026இல் வரலாற்றுரீதியான சராசரியை விட குறைவாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ள அதே வேளையில் உலகளாவிய பணவீக்க போக்கு தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும் சில நாடுகளில் சேவைகள் சார்ந்த உயர்வான பணவீக்கம் காரணமாக முன்னேற்றம் மெதுவடைந்து வருகிறது.

**வரைபடம் 26: உலகளாவிய கொள்கை வீத மாற்றங்கள்**





மூலம்: https://www.cbrates.com

புவிசார் அரசியல் பதற்றங்கள் மற்றும் நிரம்பல் சங்கிலிகளை சீர்குலைக்கும் தீவிர வானிலை நிலைமைகள் மற்றும் சீரற்ற பொருளாதார மீட்சியின் விளைவாக மாறிவரும் உலகளாவிய கேள்வி நிலைமைகள் காரணமாக நிரம்பல் மற்றும் கேள்வி ஏற்றத்தாழ்வுகள் காரணமாக உலகளாவிய பண்ட விலைகள் தளம்பலாக காணப்பட்டன. 2024இன் பெரும்பகுதியில் உணவு விலைகளில் நிலையான மாதாந்த அதிகரிப்பு இருந்தபோதிலும், உலகளாவிய உணவு விலைச் சுட்டெண்

சராசரியா, அதன் 2023 மட்டத்திற்குக் கீழே இருந்தது. இதற்கிடையில், உலகளாவிய எரிசக்தி விலைகளும் 2024 ஆம் ஆண்டில் தொடர்ந்து தளம்பலாகக் காணப்பட்டன.


**வரைபடம் 27: உலகளாவிய பண்ட விலைகள்**

உலகளாவிய வலு விலைகளின் மாதாந்த சராசரி அசைவுகள்




மூலங்கள்: ரெபினிட்டிவ் (reuters.com), புளும்பர்க் மற்றும் சவுதி அராம்கோ

உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் உணவு விலைச் சுட்டெண்ணின் அசைவுகள்




மூலம்: உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு

ISBN 978-624-5917-95-2